பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 12 வெள்ளிக்கிழமை (25.03.2005) UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர் :119

# பொதுக்கட்டமைப்பு இப்போதைக்கு வராது!

## தீர்க்கமுடியாத சிக்கல் நீடிப்பு

கொழும்பு,மார்ச்25

**ஆழிப்பேரலை அழிவு நிவ்ாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் விடயத்தில் இலங்கை அரசுத் தரப்புக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்படுவதற்கான சாத்தியம் இப் போதைக்கு அறவே இல்லை. அவ்விவகாரத்தில் இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கத் துக்கோ, தீர்வுக்கோ வரமுடியாத சிக்கல் நிலை ஸ்திரமாக இருப்பதாக இரு தரப்புகளுடனும் நெருங்கிய வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.**

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் இரு தரப்பினரதும் சமாதானச் செயலகங்களிடையே இடம்பெற்ற பேச்சுக்களில் இழுபறி நிலை நீடித்ததால், இரண்டு தரப்புகளும் தெரிவித்த கருத்துக்களை மையமாகக் கொண்டு பொது யோசனைத் திட்டமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனடிப்படையில், நோர்வே சமர்ப்பித்த பொதுத்திட்டத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது - அந்தத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என இலங்கை அரசு வற்புறுத்தியதும் - தெரிந்தவையே.

இதையடுத்து, அரசுத் தரப்பின் கருத்துக்களை உள்வாங்கி, அதற்கமைவாகப் புதிய யோசனைத் திட்டமொன்றை இப்போது இரண்டு தரப்புகளுக்கும் நோர்வே அனுசரணையாளர்கள் கையளித்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சீனப் பிரதமர் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்

சீனப் பிரதமர் பென்ஜியாகோ அடுத்த மாதம் 8 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான உடன்படிக்கையில் அவர் கைச்சாத்திடுவார்.

இதுதொடர்பான கட்டுமானப் பணிகள் இரண்டு கட்டங்களில் பூர்த்தியாகும். முதல் கட்டத்தின் முடிவில் 300 மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் திட்டம் முழுமையாகப் பூர்த்தியாகியதும் 900 கிலோவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும். சீன நிறுவனம் ஒன்று இப்பணியில் ஈடுபடும் எனவும் இது தொடர்பான பேச்சுக்களில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க அண்மையில் ஈடுபட்டார் எனவும் தெரியவருகிறது. (த)

## சிப்பாய்களின் சடலங்கள் ஹெய்ட்டியிலிருந்து ஞாயிறன்று வரும்

கொழும்பு.மார்ச்25

ஹெய்ட்டியில் அமைதிப்படைப் பணியின் போது உயிரிழந்த இலங்கை இராணுவச் சிப்பாய்கள் இருவரின் சடலங்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (27ஆம் திகதி) இலங்கைக்கு கொண்டுவரப்படுமென்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்னாயக்க நேற்றுத்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தப் பிரிவு இராணுவ டிவிஷன் தளபதிப் பொறுப்பில் விரைவில் மாற்றம்?

கொழும்பு.மார்ச்25

கிழக்கில் சர்ச்சைக்குரிய பிரதேசமாகியிருக்கும் வெலிகந்தயை ஒட்டிய பகுதியின் இராணுவத் தளபதி மாற்றப்படலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தின் 23ஆவது டிவிஷன் இராணுவப் படையணி நிலை கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில்தான் கருணா அணியினர் இராணுவத்தினரின் துணையோடு செயற்படுகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு எதிரான பல தாக்குதல் சம்பவங்களும் அண்மைக் காலத்தில் இந்த டிவிஷன் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த டிவிஷனின் பொதுக்கட்டளை அதிகாரியாக (General Officer Commanding) மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தனா உள்ளார். விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த கௌசல்யனும் ஏனைய போராளிகள் மூவரும், அம்பாறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் இவரது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் சுட்டுக் கொல்

(18ஆம் பக்கம் பார்க்க)

### மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவரின்

## சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை விரைவில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன என்று தொடர்புடைய வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

இந்த விவகாரத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்காக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் நேற்று மானிய ஆணைக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## டைனமற் வெடிக்க வைத்தும் கூட திருமலை ஹர்த்தால் பிசுபிசுப்பு

திருகோணமலை,மார்ச்25

திருகோணமலையில் நேற்றுச் சிங்களவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த கடையடைப்பு பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. காலை 8.30 மணியளவில் பஸ்தரிப்பு நிலையத்தில் டைனமற் குண்டொன்று வெடித்தது. சேதங்கள் ஏற்படவில்லை. எனினும், அங்கிருந்த கடைகள் மூடப்பட்டன.

திருகோணமலை நகரில் வசிக்கும் சிங்கள மக்களைப் வெளியேற்ற அரசு புலிகளுடன் இணைந்து திட்டமிடுவதைக் கண்டித்தும், பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாததைக் கண்டித்தும், நிவாரண நடவடிக்கை நடைமுறையை எதிர்த்து நான்கு தினங்களாக உண்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் மினி பஸ்களுக்கு முற்றவெளியில் தரிப்பிடம்

### ஏப்ரல் முதல் செயற்படத் தொடங்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். நகரில் சன சந்தடி மிகுந்த இடத்தில் இயங்கிவரும் தனியார் மினிபஸ் தரிப்பிடம், முற்றவெளிப்பகுதிக்கு இடம்மாற்றப்படுகின்றது. சித்திரைப் புத்தாண்டு முதல் மினிபஸ் தரிப்பிடம் அங்கு இயங்கத் தொடங்கும்.

சகல மினிபஸ்களும் கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களும் முற்றவெளியில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்தே சேவையில் ஈடுபடும்.

யாழ். மாநகர ஆணையாளர் க.குணராசா நேற்று இதனை உத்தியோகபூர்வமாக அறி

(18ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளத்தில் பஸ் தடம்புரண்டது நடத்துநர் பலி; பயணிகள் படுகாயம்!

வவுனியா,மார்ச்25

வவுனியா, புளியங்குளம் பகுதியில் தமிழீழ போக்குவரவுக் கழகப் பேருந்து ஒன்று தடம்புரண்டது. நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தடம்புரண்ட பேருந்தில் நசியுண்டு நடத்துநர் உயிரிழந்தார். 14 பயணிகள் படுகாயமடைந்தனர். புளியங்குளத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்ட இப்பேருந்து எதிர்த்திசையில் வந்த ஓட்டோ ஒன்றை விலத்திச் செல்ல முற்பட்டபோது வீதியைவிட்டு விலகித் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேருந்தின் மிதிபலகையில் நின்றுகொண்டிருந்த நடத்துநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பயணிகளான நிதர்ஷன் (வயது-7), தவமணி (வயது-47), மாணிக்கம் (வயது-56),

(18ஆம் பக்கம் பார்க்க)

## 4 வீத வட்டியுடன் அரச ஊழியர்களுக்கு 10 லட்சம் ரூபா கடன் வழங்க அரசு திட்டம்

### அமைச்சரவை அங்கீகரித்தது

கொழும்பு.மார்ச்25

அரச ஊழியர்கள் அனைவருக்கும் குறைந்த வட்டி வீதத்துடன் பத்து லட்சம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது என அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை அமைச்சரவை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக இத்திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கடன் திட்டத்திற்கு வருடாந்தம் நான்கு சதவீத வட்டி மாத்திரமே அறிவிடப்படும். இதுதொடர்பான சுற்றுநிருபம் அடுத்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைக்க தனியார் காணிகளை சுவீகரிக்க அரசு திட்டம்

கொழும்பு,மார்ச்25

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு வீடமைத்துக் கொடுக்க தனியாரிடம் உள்ள காணிகளும் சுவீகரிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் பிரதி அமைச்சர் மஹிந்த அமரசிங்க நேற்று இதனைக் கொழும்பில் தெரிவித்தார்.

தனியாரிடமிருந்து காணிகலைச் சுவீகரிப்பதற்கு ஜனாதிபதியின் அனுமதியை மாத்திரமே எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. ஆறு மாதங்களுக்குள் வீடுகளை

(18ஆம் பக்கம் பார்க்க)



வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுக்காலை சிறப்புற நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் பஞ்சரதபவனியைக் காண்பதற்காக ஆலயத்தில் கூடியிருந்தனர். ஸ்ரீமத் வாலாம்பிகா சமேதராய் ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் தேருக்கு ஆரோகணிப்பதையும் - பஞ்சரதங்கள் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம் *(படங்கள்:கவிதரன்)*

# வடமராட்சியில் திங்களன்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

கரவெட்டி,மார்ச்25

குடாநாட்டில் அதிகரித்துவரும் இராணுவ அத்துமீறல்களைக் கண்டித்தும், சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு, கோரியும் வடமராட்சியில் எதிர்வரும் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவிருக்கின்றது.

வடமராட்சிப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பாக ஒன்றியம் விடுத்திருக்கின்ற அறிக்கையில் பேரணிக்கான கோரிக்கைகள தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளின் விவரம் வருமாறு:-

★ உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் பயன்தரு நிலங்களையும், குடியிருப்புக்களையும் பாடசாலைகளையும் தொடர்ந்து இராணுவத்தினர் தங்கள் கட்டுக்கோப்பில் வைத்திருப்பதைக் கண்டிக்கின்றோம்.

★ தமிழீழத்தின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைத் திட்டமிட்டுக் கொலைசெய்வதை உடன் அரசு நிறுத்த வேண்டும்.

★ கடற்கரைப் பிரதேசத்தில் 200 மீற்றருக்குள் கட்டடங்களை அமைக்க அனுமதி மறுக்கும் அதேநேரம் கடற்கரையில் புதிதாக இராணுவ முகாம்களைப் பலப்படுத்தி வருகின்றமையை கண்டிக்கின்றோம்.

★ இராணுவத்தினரின் பாலியல் சேட்டைகள் போன்ற நடவடிக்கைகளையும் அதிகரித்த இராணுவ வாகனங்களின் மூலம் ஏற்படுத்தப்படும் விபத்துக்களையும் கண்டிக்கின்றோம்.

★ சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சம்பந்தமான நிவாரண நடவடிக்கைகளை மிக மந்தகதியில் நடைபெறுவதனைக் கண்டிக்கின்றோம்.

★ கடற்றொழிலாளர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள அனுமதிப்பத்திரம் பெறும் கெடுபிடிகளை நீக்குமாறு கோருகிறோம்.

★ உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகளையும் - இராணுவம் தங்கி இருக்கின்ற வீடுகளையும் மீண்டும் குடியிருப்பாளர்களிடம் கையளிக்கக் கோருகிறோம்.

★ இடைக்கால நிர்வாகத்துக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பித்து விடுதலைப் புலிகளிடம் கையளிக்கக் கோருகிறோம்.

★ குடாநாட்டு இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரிப்பதை நீக்க இராணுவத்தை எம்மண்ணிலிருந்து அகற்றுமாறு கோருகிறோம்.

(த-70)

# அரச ஊழியர் இலக்கியப் போட்டி மாகாண மட்டத்துக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் வருடம் தோறும் அரச ஊழியர்களுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டுவந்த இலக்கியப் போட்டிகள் இந்தவருடம் முதல் மாகாண மட்டத்துக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

செத்சிறிபாய, பத்தரமுல்லவில் உள்ள கலாசார அலுவல்கள் அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தேசிய கலை இலக்கிய விழாவின் முன்னேற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சிசிற பிரியதர்ஷன தலைமையில நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட செட்டிக்குளம் பிரதேச கலாசார அலுவலர் எஸ். ஜோன்சன், ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான கலாசார அலுவலர் இந்தியானந்தன் ஆகியோர் அரச ஊழியர்களுக்கான போட்டிகள் குறித்துப் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

அரச ஊழியர்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகள் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டுவருகின்றன. இதனால், இலக்கியத்துறையில் நிறைந்த அனுபவம் மிக்கவர்களாகவும் - வருடம் தோறும் பரிசில்களைப் பெற்றுக்கொள்பவர்களே தொடர்ந்தும் பரிசில்களைப் பெற்று வருகின்றனர்.

இத்தகைய நடைமுறைகளால் மேற்படி போட்டிக்கு ஆக்கங்களை அனுப்பிவைக்கும் அனேகமான அரச ஊழியர்களுககு பரிசில்கள் கிடைபதில்லை. குறிப்பாக, இலக்கியத்துறையில் பிரதேசத்திலுள்ள இளம் எழுத்தாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, வளர்ந்துவரும் எழுத்தாளர்களான அரச ஊழியர்களின் நன்மை கருதி இலக்கியப் போட்டிகள் பிரதேச செயலர் பிரிவு மட்டத்துக்கும மாவட்ட மட்டத்துக்கும் விஸ்தரிககப்படவேண்டும். பிரதேச செயலர் பிரிவு ரீதியில் பணிபுரிந்துவரும் கலாசார அலுவலர்கள் இந்தப் போட்டிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவர் - என்று தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சிசிற பிரியதர்ஷன:

மேற்படி போட்டிகளை விரைவில் நடத்த வேண்டியுள்ளது. எனவே, இந்தவருடம் முதல் ஆரம்பகட்டமாக அரச ஊழியர்களுக்கு இடையிலான இலக்கிய போட்டிகள் மாகாண மட்டத்துக்கு விஸ்தரிக்கப்படும். மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுபெறும் ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிகளில் இணைத்துக்கொள்ளப்படும்.

மாகாண மட்டத்துக்கு விஸ்தரிக்கப்படும் இந்தப் போட்டிகள் அடுத்துவரும் வருடங்களில் பிரதேச மாவட்ட மட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்றார்.

(எ)

# செய்தியில் திருத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

ஆபாசப்படம் பார்த்தவர்கள் அல்வாயில் சிக்கினர் என்னும் தலைப்பில் கடந்த புதனன்று உதயனின் 3 ஆம் பக்கத்தில் வெளியாகிய செய்தியில் -

சம்பவம் நடைபெற்ற இடம் அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறாகும். சம்பவம் நடைபெற்ற இடம் அல்வாய் வடமத்தியில் உள்ள குமுதினிக் கிராமம் என்பதே சரியாகும். தவறுக்காக வருந்துகிறோம். (ஐ)

# விஸ்வகர்ம சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

அகில இலங்கை விஸ்வகர்ம சங்கத்திற்கான யாப்பு தயாரித்தல் மற்றும் அங்கத்தவர் இணைப்புத் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்துக்கென ஏற்கனவே தயாரிக்கப்பட்ட யாப்பு இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, சபையின் அங்கீகாரம் பெறப்படும் என்றும் -

அங்கத்தவர்கள் இணைப்பு, அடையாள அட்டை வழங்குதல் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் -

அகில இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் தலைவர் ஐயம்பெருமாள் சுரேஸ் அறிவித்துள்ளார். இக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்25

தெல்லிப்பழை கிழக்கு, வயலிருப்பைப்பதி அருள்மிகு ஸ்ரீ வைரவசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.44 மணிக்கு நடைபெறவுள்ளது.

(த-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்25

சங்கரத்தை பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் செஞ்சொற்கொண்டல் இரா. செல்வவடிவேலின் பெரியபுராண விரிவுரையின் இறுதிப்பகுதி இடம்பெறும். (த-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்25

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கம் மகா கணபதி ஆலய மணவாளக் கோலத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மணவாளக் கோலத் தினத்தை முன்னிட்டு விநாயகப் பெருமானுக்கு பகல் சங்காபிஷேகமும் விசேடபூசையும் நடைபெறும். மாலை ஸ்ரீமத் சித்தி புத்தி சமேத விநாயகப் பெருமானுக்குத் திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது.

(த-203)

# கலைக் கல்வியின் விழிப்புணர்வுக்கு வழிகாட்டும் அழகெழல் போட்டி

***யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் அழகெழல் போட்டிகள் இன்றும், நாளை சனிக்கிழமையும் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன. அழகெழல் போட்டியின் நோக்கம் பற்றி விளக்குகின்றது இந்தக்கட்டுரை.***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினர் இவ்வாண்டும் 'அழகெழல்' எனும் அழகியல் துறைசார் போட்டி நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். இன்றும் நாளை சனிக்கிழமையும் இந்தப் போட்டி நடைபெறும்.

போட்டி நிகழ்வுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் சித்திரம், சிற்பம், இசை, நடனம், நாடகம் ஆகிய போட்டி நிகழ்வுகளுக்காக தங்களைத் தயார் நிலையில் வைத்துள்ளன.

இம்முறை யாழ் மாவட்ட எல்லை கடந்து கிளிநொச்சி மாவட்டத்திலும் முதற்கட்டமாக 'அழகெழல்' ஓவியப்போட்டி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மிகுந்த ஒத்துழைப்புடன் கடந்த 18.03.2005 அன்று ஓவியப்போட்டி சிறப்புற நடத்தி முடிக்கப்பட்டது. கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர், தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் மற்றும் பல கல்வியியலாளர்களின் ஆசியுரையுடனும் கல்விப்புலம் சார்ந்தோரின் நிறைந்த ஒத்துழைப்புடனும் போட்டிகள் செவ்வனே நடத்தப்பட்டன.

எமது தேசத்து மாணவர் மத்தியில் கலைக் கல்வி விழிப்புணர்வையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் நோக்குடன் இந்தப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பல்வேறுபட்ட உடல், உளத்தாக்கங்களில் இருந்து விடுபட்டுக் கொள்வதற்கான - ஆற்றுப்படுத்துவதற்கான ஒரு தளமாக அழகியல் அமைகின்றது. போரின் அனர்த்தத்திற்கும் இயற்கையின் சீற்றத்திற்கும் ஆளாகி இருக்கின்ற எமது சமூகத்தில் இவ்வாறான செயற்பாடுகள் அழகியல் கல்விக்கூடாக அளிக்கப்படல் வேண்டும்.

மாற்றம் அடைந்துவருகின்ற புதிய கல்விச் செல் நெறிகளிலே அழகியல் கல்விக்கு முக்கிய இடமளிக்கப்படுகிறது. மனிதர்களை நேசிக்கவும், சுற்றாடலை நேசிக்கவும், நாட்டுப்பற்றை வளர்க்கவும் கலைக்கல்வி ஆதரமாக அமைகின்றது.

உலகளாவிய ரீதியில் இன்றைய இனங்களெல்லாம் தமது தேசியத்தை நிலைநிறுத்தவும் அதன் அடையாளங்களை விளங்கிக்கொள்ளவும் கலைகளே ஆதரமாகின்றன. தேசியத்தின் மூச்சும்பண்பாட்டு விழுமியங்களின் பேச்சும் கலைத்தழுவலிலே நிலைத்திருக்கின்றன.

இயற்கை அழிவுகளும் இடர் தோய்ந்த எமது வாழ்வியலும் மனித நடத்தையில் அசாதாரணத்தை ஆழமாக்கியிருக்கின்றது. இதிலிருந்து உயர்வான மாற்றத்தையும் உள ஏற்றத்தையும் எமது சமூகம் வேண்டி நிற்கின்றது.

எமது சமூகத்தில் பொது வேலையில் ஈடுபட சிறந்த தலைமைத்துவம் அவசியமாகின்றது. தொடங்கும் ஆற்றல், தொடர்புபடுத்தும் ஆற்றல், அமைக்கும் ஆற்றல், எதிர்கால தூரதரிசனம் என்பவை போன்ற தலைமைத்துவப் பண்புகள் கொண்ட மனிதர்கள் எம்மிடையே விளைவது அவசியமாகின்றது. இதற்கு அடிப்படையான எண்ணக்கருக்கள் கலைக் கல்வியிலேயே காணக்கிடக்கின்றன.




'அழகெழல் - 2004' அரங்கில் நடனமாடும் சிறுவர்கள்

## பண்புகளை மேம்படுத்தும் அழகியல்

சமூகத்திற்கு முரணான பகை, குரோதம், பழிவாங்கள் போன்ற தீய எண்ணங்கள் மறைந்து, மனித ஆதரவும் நயக்கும் திறனுள்ள சிந்தைமிகு மனிதர்களை உருவாக்குவதற்கு கலைக் கல்வி ஆதரமாக அமைகின்றது. மனித இனத்தின் முன்னேற்றத்திற்காக தன்னடக்கமுள்ள நற்பண்புகளைக் கொண்ட ரசனையுள்ள மனிதப் பண்புகளானது கலைக் கல்வி மூலமே சாத்தியமாகின்றது. மனித மனத்தில் அறிவின்மையும், துன்பத்தையும் அகற்றி கலையானது, இன்பத்தைத் தருகின்றது.

**க. ரட்ணேஸ்வரன்**
**கல்வியியலாளர் நுண்கலைத்துறை.**
**யாழ்.தே.க.கல்லூரி.**

ஆகவே, கலையின் காத்திரத்தை அறிந்து கல்வி வழி அதனைப் பிரயோகித்து பயன் பெறுவோம். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத் துறையினர் இப்போட்டிகளுக்கூடாக வெறும்பரிசில்களையும் பாராட்டுக்களையும் மாத்திரம் வழங்க வில்லை. ஒரு பண்பு சால் நாகரிக மாற்றத்திற்கான ஒரு அடிக்கல்லை நடுகின்றனர்.

ஆகவே, கலைக்கல்வி ஆர்வலர் அனைவரும் இவ்வாக்கபூர்வ முயற்சிக்கு ஆதரவு வழங்குவோம்; ஆனது செய்வோம்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இனவாத அணியுடன் ஆனந்த சங்கரியார்

ஆழிப்பேரலை அழிவுகளிலிருந்து மக்களை மீட்டு, அவர்களுக்கு நிவாரணம் வழங்கி, மீள்கட்டு மானங்களை ஏற்படுத்துவதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து - இணைந்து - பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வலுவடைந்து வருகின்றது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகள்முதல் ஐ.நா. அமைப்பு வரை சகல தரப்பினரும் இந்த ஏற்பாட்டின் முக்கியத்துவமும், அவசியமும் குறித்து நன்கு உணர்ந்துள்ளவர் என்பதால் இந்தப் பொதுக் கட்டமைப்பு விரைந்து உருவாக்கப்படவேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்; வலியுறுத்தியும் வருகின்றனர்.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த - ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான ஆணையாளரான - பெனிட்டா பெரேய்ரோ அம்மையார் கூட இதனையே இங்கு கூறியிருந்தார்.

ஏன், இலங்கைத்தீவின் ஜனாதிபதி சந்திரிகா கூட இது விடயத்தில் மனதளவில் என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றாரோ என்பது தெரியாவிட்டாலும் - உதட்டளவில் - பேச்சளவில் - இந்தப் பொதுக் கட்டமைப்பு அத்தியாவசியம் என்பதைப் பகிரங்கமாகக் கூறி வருகின்றார்; கருத்து வெளியிட்டு வருகின்றார்.

ஆழிப்பேரலையால் இலங்கையில் பாதிப்புக்குள்ளான - அவலத்துக்கு உட்பட்ட - பிரதேசங்களில் கணிசமான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.

அத்தோடு, இது பெரும் மனித அவலத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு நோக்கப்படவேண்டிய விவகாரம்.

பேரலைப் பேரழிவுகளினால் சொல்லொணாத் துன்ப, துயரங்களைச் சந்தித்து நிற்கும் மக்கள் கூட்டத்துக்கு விரைந்து நிவாரண, மீள்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது.

அதனால்தான், இவ்விடயத்தில் இன, மத,மொழி, கலாசார, பின்புலங்களை நோக்காமல் - அரசியல், அதிகாரபலங்களைக் கருத்தில் கொள்ளாமல் - ஒன்றிணைந்து அனைத்துத்தரப்பினரும் இந்த உயரிய மனித விழுமியப் பணியில் ஈடுபடவேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது.

பேரலையால் பாதிப்புக்குள்ளான பகுதிகளைத் தமது அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் அரசும், புலிகளும் கூட தங்களுக்குள் இருக்கும் அரசியல், அதிகார, நிர்வாக, முரண்பாடுகளை ஒரு புறம் வைத்துவிட்டு, இவ்விடயத்துக்காகக் கூட்டுச் சேர்ந்து இயங்கத் தயாராக வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதும் இதற்காகத்தான்.

ஆனால், பெரும் மனித அவலத்தோடு கூடிய இந்தப் பேரழிவுப் பிரச்சினையில் மனித அவலத்துக்கு அப்பால், இனவாதமே சிலருக்கு முன்னே தோற்றுகின்றது. அதனால், இந்த விடயத்தையும் இனவாதக் கண்ணோட்டத்திலேயே அவர்கள் நோக்குகின்றனர். பௌத்த, சிங்கள, மேலாண்மைப்போக்குடைய ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள (?) தேசிய இயக்கம் போன்றவை பொதுக் கட்டமைப்பு உருவாக்குவதைக் கண்மூடிக் கொண்டு எதிர்ப்பதற்கும் இனவாதமே காரணம்.

மனிதப் பேரவலம் அவர்களது மனதைத் தொடவில்லை; மாறாக இனவாதம் மனதில் ஊன்றித் திளைத்து நிற்கிறது.

இந்த விடயத்திலும் அந்தப் பேரினவாதக் கும்பலுக்கு ஒத்து ஊதத் தொடங்கியிருக்கின்றார் சங்கரியார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தனிமனிதப் பிறழ்வாகக் கருணா என்ற நபர் 'தகிடுதத்தம்' பண்ணினார் என்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சங்கரியார் என்று ஆகிவிட்டது.

பேரினவாதத்தில் ஊறிய - சிங்கள, பௌத்த மேலாண்மைப் போக்குடைய - தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகள்தான் இந்த மனிதாபிமானப் பிரச்சினையைக் கூட இனவாதக் கண்ணோட்டத்தில் நோக்குகின்றன என்று பார்த்தால், அரசியல் சாக்கடையில் அரைநூற்றாண்டுகளுக்கு மேல் அடித்துப் புரண்டு, அழுக்குப் பூசிக்கொண்டு நிற்கும் ஆனந்த சங்கரி போன்றோரும் தமது அரசியல் லாபங்களுக்காக அந்தச் சிங்கள இனவாதிகள் போலவே - அவர்கள் அணியில் சேர்ந்தே - விமர்சிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இது தமிழினத்தின் சாபக்கேடேயன்றி வேறில்லை.

பேரலைப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்கும் விடயத்தில் களநிலைவரங்களையும், யதார்த்தங்களையும் புரியாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சங்கரியார் பிதற்றுவதை ஒரு பொருட்டாக மதிக்காமல் விட்டுவிடுவதே மேல்.

# ஒலி, ஒளி ஊடகத்தின் ஊடாக வாழ்வை ஆவணப்படுத்த வேண்டும்!

## திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

ஒலி, ஒளி ஊடகத்ினூடாகத் தமிழ் மக்களின் வாழ்வு ஆவணப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மொழியைப் பாதுகாக்கும் இயக்கம் திரைப்படத்தினூடாக வெளிக்கொணரப்பட வேண்டும்.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் க.தேவதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவித்தார்.

மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க.தேவதாசன் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இதுவரை காலமும் தனிச் சிங்களத்திலேயே இயங்கி வந்தது. தமிழ்ப் பிரிவு அங்கு உருவாக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முதற் கூட்டம் இதுவாகும். மக்களும் அரச நிர்வாகமும் இணைந்த செயற்றிட்டமாக இது முன்னெடுக்கப்படும். ஆவணப்படுத்தல் எமது இனத்தின் பெரும் குறைபாடாக இருந்து வருகிறது. திரைப்படத்திற்குரிய சக்தியைக் கொண்டு எமது வரலாறு ஒளியால் எழுதப்படவேண்டும்.

இருநூறு பேர்கொண்ட திரையரங்குகளைக் கிராம ரீதியாக உருவாக்குவதன் மூலம் நல்ல படங்கள் மக்களைச் சென்றடையச் செய்யமுடியும். தமிழ்க் கலை, இலக்கியம் முன்பு போன்று இன்று இல்லை. தமிழின் வளர்ச்சியே பாதிக்கப்பட்டிருக்கின்றது. நாம் எமது வரலாற்றைத் தொலைத்துக்கொண்டிருக்கிறோம். மொழியைப் பாதுகாக்கும் இயக்கம் திரைப்படத்தினூடாக மேல் வரவேண்டும். நல்ல படங்களை யாழ்ப்பாணத்தில் பெறமுடியாதுள்ளது. செயலகம் மூலமாக அவ்வாறானதொரு செயற்றிட்டத்தை தே.தி.கூ.தாபனம் மேற்கொள்ளும் தேசியக் கலைகள் சினிமாவின் ஊடாக வளர்த்தெடுக்கப்படவேண்டும். தமிழ் - சிங்களப் படங்களின் மூலம் மக்கள் மத்தியில் நிலைமையைப் புரியவைப்பதன் மூலம் நாட்டின் இனப்பிரச்சினையைக் கூடத் தீர்த்து வைக்க முடியும் - என்றார்.

பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் சலனசித்திரம் சார்பில் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, வி.எஸ்.சிவநேசன், சி.விவணா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இறுதியில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விளக்கும் வீடியோ நாடாவும் காண்பிக்கப்பட்டது.

(ஐ)

# ஜூன் மாதத்துக்கு முன் பொதுத்தேர்தலா?

கொழும்பு,மார்ச் 25

எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறலாம் என நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. உத்தேச தேர்தலை எதிர்கொள்ளும்வகையில் அரச ஊடகங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளனவாம்.

அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் லேக்ஹவுஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் என்பவற்றில் செய்திப்பிரிவுகளைச் சேர்ந்த உயரதிகாரிகளுக்கு அரசால் விசேட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி அச்சுறுத்தல் விடுத்துள்ளது. அதேவேளை, அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப்பிரேரணை ஒன்றைக் கொண்டு வரப்போவதாகவும் அது அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிர்ச்சி ஒன்றைக் கொடுக்கும்வகையில் பொதுத் தேர்தலை நடத்திவிட அரசு தீர்மானித்துள்ளதாகவும் -

ஜனாதிபதிப் பதவி அதிகாரம் தம்பக்கத்தில் இருக்கும் போதே பொதுத்தேர்தலை நடத்திவிட வேண்டும் என்று அரசு கருதுகின்றது எனவும் - கூறப்படுகின்றது.

குறிப்பாக, செய்தித்தாள் கண்ணோட்டப் பகுதியில் அரசைப் பலவீனப்படுத்தக் கூடிய செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் தலைப்புச் செய்தியாக அவை வெளிவந்திருந்தாலும் அவற்றை வாசிக்கக்கூடாது எனவும் ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப்பிரிவுக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

கடந்த ஒருவருடத்தில் அரசு மேற்கொண்ட மற்றும் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக மக்களைக் கவரக்கூடிய செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குமுன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அரசமைப்பை மாற்றும் அரசின் திட்டத்திற்குப் பல தரப்பிலும் எதிர்ப்புகள் கிளம்பி உள்ளதால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுப் பொதுத்தேர்தலை நடத்த அரசு முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது எனவும் நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளன.

(எ-க)

# 'சுனாமி' கொடுப்பனவு பெற பலருக்கு ஆர்வம் இல்லையாம்

தென்மராட்சி,மார்ச் 25

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுத் தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்த குடும்பங்களில் பல நிவாரணக் கொடுப்பனவான ரூபா 5 ஆயிரம் பெறுவதில் அக்கறை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்த 124 குடும்பங்களுக்கான கொடுப்பனவுக்குரிய தொகை வங்கிக்குக் கிடைத்த போதிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை தமது வங்கிக் கணக்கினை ஆரம்பிக்கவில்லை.

அதேவேளை, வங்கிக்கணக்கு ஆரம்பித்த பலர் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளவில்லை.

முல்லைத்தீவு வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்த குடும்பங்கள் இக்கொடுப்பனவைப்பெறப் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

இக்கொடுப்பனவுக்கான பட்டியல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு அதற்குரிய தொகை சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால், இக்கொடுப்பனவைப் பெற பாதிக்கப்பட்ட மக்கள் முன்வராதது குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகிறது. இக்கொடுப்பனவினைப் பலர் பெறாததால் அடுத்த கட்டக் கொடுப்பனவுக்கு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

# அதிகமானவருக்கு பல்கலை அனுமதி

எதிர்வரும் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் ஆறாம் திகதி நடைபெறும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அதிக எண்ணிக்கையில் அனுமதி பெறுவார்களெனத் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்கள் 1,406 பேர் மேலதிகமாக அனுமதிக்கப்படுவதால் மொத்தமாக அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 255 ஆக உயரும்.

கடந்த வருடம் 14 ஆயிரத்து 450 மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது.

ஊவாவில் எதிர்வரும் ஆண்டுமுதல் இயங்கவுள்ள பல்கலைக்கழகத்திற்கு 140 மாணவர்களை மேலும் சேர்த்துக் கொள்ளமுடியுமென்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(எ-க)

# நவாலி ஆலய வீதி ஊடாக 'கள்' எடுத்துச் செல்ல எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

நவாலி களபாவோடை கண்ணகை அம்மன் வீதி முகப்பூடாக மதுபான உற்பத்திக்கான 'கள்' கொண்டு செல்லுதல் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு கோரி 250பேர் கையொப்பம் இட்ட மகஜர் நவாலி மக்கள் சார்பில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தமகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆலயத்தின் புனிதத்தன்மை கெடும் வகையில் ஆலய வீதிவழியாக மதுபான வடிசாலைக்கு வாகனங்கள் மூலம் 'கள்' கொண்டு செல்லப்படுகின்றது.

இதனால் ஆலயச் சூழலில் மதுபான நாற்றம் வீசுகிறது.

வடிசாலைக்கு என நவாலி தெற்கு கொத்துக் கட்டிப் பிரதான வீதியூடாக விசாலமான தார் வீதியுண்டு. எனவே, வடிசாலைக்கு 'கள்' கொண்டு செல்லும்போது ஆலயத்தின் புனிதத் தன்மை கெடாத வகையில் தெற்கு நவாலி தார் வீதியூடாகக் கொண்டுசெல்ல உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-185)

# நாகதம்பிரான் ஆலயத்துக்கு விசேட பஸ் சேவைகள்

கிளிநொச்சி,மார்ச்25

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் நாயாறு - செம்மலை - அளம்பில் - முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு தடத்திலும், குமுழமுனை - முள்ளியவளை - புதுக்குடியிருப்பு தடத்திலும், முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் புதுக்குடியிருப்பு தடத்திலும், மாத்தளன் புதுக்குடியிருப்பு - நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் - முத்தையன் கட்டு - புதுக்குடியிருப்பு தடத்திலும் -

உடையார் கட்டு - விசுவமடு தடத்திலும், கிளிநொச்சி - பரந்தன் தடத்திலும், வட்டக்கச்சி - இராமநாதபுரம் - கல்மடு தடத்திலும், ஸ்கந்தபுரம் - கோணாவில் - பரந்தன் தடத்திலும், வன்னேரி - அக்கராயன் - வட்டக்கச்சி தடத்திலும், மல்லாவி - மாங்குளம் - கிளிநொச்சி தடத்திலும், நட்டாங்கண்டல் - மல்லாவி - கோட்டை கட்டி கிளிநொச்சி தடத்திலும் -

புளியங்குளம் - கிளிநொச்சி தடத்திலும், வெள்ளாங்குளம் - பூநகரி - பரந்தன் தடத்திலும், தாழையடி - பரந்தன் தடத்திலும் - முகமாலை - பரந்தன் தடத்திலும் கோயில்வரை பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தமிழீழ போக்குவரத்துக்கழகத்தின் நடுவப் பணிமனை அறிவித்துள்ளது.

(ஓ-202)

**நாளை**

பங்குனி 13
சனிக்கிழமை
26.03.2005
திதி : பிரதமை
பின்னிரவு 3.20 வரை.
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 1.15 வரை.
சுபநேரம் : 03.14 - 04.44
ராகுகாலம் : 09.14 - 10.44
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் உடற்பயிற்சி செய்யும் பொழுதும் கவலையில்லாமல் மகிழ்ச்சியாக இருந்தால் ஆயுள் நீடிக்கும்.
– பேக்கன்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

202 XXXX தொடர் இலக்கமுடைய ஆட்டோ, 1000 லீற்றர் தண்ணீர்த்தாங்கி, சிசில் குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr.வேலன் அம்மன், சிவராஜா அவென்யூ, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (43487)

## வீடு விற்பனைக்கு

பழைய பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரியில் 9 அறைகள் கொண்ட பெரியவீடு 4½ பரப்புக் காணியில் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சே.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். T.P.: 222 - 7802. (43471)

## வாடகைக்கு

கோயில் வீதி, I.C.R.C. சந்தியடிக் கடை உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: பாலா, இல.18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 222 6875. (43477)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கொடிகாமம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கும் கொடிகாமம் சந்திக்கும் இடையில் தங்கநகை ஒன்று 23-03-2005 புதன் கிழமையன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: திருமதி பா.புகழினி (ஆசிரியை), "பெரியதாயகம்", இடைக்குறிஞ்சி, வரணி. (43465)

## தவறிவிட்டது

திருமதி கணபதிப்பிள்ளை தங்கரத்தினம் என்பவருடைய கிளிநொச்சி நிரந்தர அனுமதி அட்டை, அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் ஒன்று 20-03-2005 ஞாயிறன்று முகமாலை சாவடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 384/5, இராமநாதபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (சி-41806)

## அபூர்வ ஜோதிடம்

தீர்க்க முடியாத மர்மநோய்கள் விஷேச மருந்தியலில் குணப்படல், உச்ச அதிர்ஷ்ட பலன் பெறல். தொடர்பு: வெள்ளி, சனி, ஞாயிறு 8.30 - 2.00 p.m. உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, விதானையார் வளவு, ஆனைக்கோட்டை. (43452)

## இசைப்பயிற்சி நிறைவு

யாழ்ப்பாணம்,மார்ச்25

வலி.மேற்கு பிரதேச செயலகத்தால் நடத்தபபட்ட இலவச வாத்திய இசைப்பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிகதிக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதியுதவியுடன் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இப்பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வுகள் பயிற்சிக் குழுத் தலைவர் எஸ்.சகிலா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ்"ம் சிறப்பு விருந்தினர்களாக போரூட் நிறுவன இணைப்பாளர் டெனி, வலி. மேற்கு உதவிப பிரதேச செயலர் திருமதி த.பாபு, நிர்வாக அலுவலர் மு.சிவராசா, கலாசார உத்தியோகத்தர் செல்வி கறஜனி, வலிமேற்கு கலாசாரப் பேரவை உப தலைவர் கலாபூசணம் சு.கணபதிப் பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர். (29-202)

## நவாவரண பூசை

யாழ்ப்பாணம்,மார்ச்25

திருநெல்வேலி ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தில் இன்று வெள்ளிக்கிழமை நவாவரண பூசை நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்குக் காயத்திரி யாகமும் முற்பகல் 11 மணிக்கு அபிஷேகமும், பிற்பகல் 3மணி தொடக்கம் நவாவரண பூசையும் இடம் பெறும்.

இப் பூசைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நாமக்கல் மாவட்ட இராஜ இராஜேஸ்வரி ஆச்சிரம மாதாஜி ஸ்ரீ வித்தியா அம்பாள் சரஸ்வதியின் தலைமையில் நடைபெறும். (29-202)

## சாயி போதனைகள் குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்25

வடபிராந்திய சத்ய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் போதனைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள சத்யசாயி மந்திர் நிலையத்திலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இராமநாதன் வீதியிலுள்ள திருநெல்வேலி சத்யசாயி சேவா நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் மத்திய இணைப்பாளர் மு.வன்னியசேகரம், ஜனாதிபதி ஆலோசகர் சு.சிவதாசன், சிலிங்கோ குறூப் நிறுவனங்களின் உப தலைவியும் ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவன அறக்கட்டளை உறுப்பினருமான சட்டத்தரணி மாலா சபாரட்ணம், இளைப்பாறிய திருமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.புகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஒ-202)


## தச்சு வேலைகள்

சமையலறை பான்றி கபேட் மற்றும் அனைத்து வித மரவேலைகளும் தரமான முறையில் செய்துதரப்படும்.

தொடர்பு: கண்ணன்,
கோகுலம், சுதுமலை வடக்கு,
மானிப்பாய். T.P.: 077 6655931

(434778)



## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று (25-03-2005) வெள்ளிக்கிழமை
காலை 9.56 - 11.08 மணி வரையுள்ள சுபவேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

**P.M.T. TRADERS**

என்னும் ஸ்தாபனத்தை இல.34, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கவிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ரீ.வி., டெக், றேடியோ, VCD மற்றும் மணிக்கூடுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.ப.முருகானந்தன்
(தம்பர்),
திருநெல்வேலி.

(43488)(26-14-15)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல மெக்கானிக்

### அமரர் நாகமுத்து கணேஸ்

தோற்றம் 07-11-1935 | மறைவு 04-04-2004

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!*
*நீங்கள் எங்களை விட்டு மறைந்து*
*ஓராண்டு சென்றாலும் உங்கள்*
*அன்பு எங்கள் நெஞ்சை விட்டகலாது!*

பூம்பொழில்,
நாச்சிமார் கோயிலடி. (43490)(26-14) - குடும்பத்தினர்.


## ராகவன் கல்வி நிலையம்

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை கிழக்கு
2005/2006/2007 கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன

| | |
|---|---|
| தமிழ்: | திரு. V.M.S. அமரசிவம் |
| இந்துநாகரிகம்: | திரு. P. சந்திரன் |
| புவியியல்: | திரு. M. மனோகரன் |
| அளவையியல்: | திரு. S. ஜெயசுரேஸ் |
| பொருளியல்: | திரு. M.C. சுதாகரன் |
| வர்த்தகம்: | திரு. உதயமோகன் |
| கணக்கீடு: | திரு. பார்த்தீபன் |

- நிர்வாகி.

(43474)(26-14)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குருநாதன் அலெக்ஸ் சாந்திரியா

*ஆண்டுகள் மூன்றானாலும் ஆறாதம்மா எம் துயரம்*
*பாழுமிவ் வுலகை விட்டு நீர் பரலோகம் சென்றுவிட்டீர்*
*நாளும் உம்மை நினைத்தே நாமிங்கு*
*நெஞ்சுருகித் தவிக்கின்றோம்*
*அம்மா உம் ஆத்மா சாந்தியுற ஆண்டவனிடம் இறைஞ்சுகின்றோம்.*

78, கண்டி வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம். (43489(26-14) கணவர், பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்

### கிருஷ்ணர் நாகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர். யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

தோற்றம் 10-10-1918 | மறைவு 23-02-2005

நாள்கள் முப்பத்தொன்று ஆயினும்
ஆறுதில்லையே எம் அன்பு மனம்
மீண்டும் ஒருமுறை உம்முகத்தைக் காண
விரும்புகிறோம் வருவீரோ எம்மிடத்தில்?

23-02-2005 அன்று அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எம் நன்றிகளைத் தொவிப்பதுடன், இன்று (25-03-2005) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09. அரசடி வீதி. கே.கே.எஸ்.வீதி.
தட்டாதெரு. யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.
(434761)(26-14)

## 91ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 30-05-1975 | அன்னை மடியில் 01-05-1999

### திருமதி செல்வகுமார் ஜீவராணி
### செல்வன் செல்வகுமார் திலக்

ஆழியின் பிடியில்: 26-12-2004

*இல்லாளின் சிறப்புணர்த்தி இதமான வாழ்வளித்து*
*ஈரிரண்டு குமைமனை இங்கிதமாய்க் கொண்டவளே*
*ஆழியின் கோரப் பசிக்கு அகப்பட்ட ஜீவாவே...!*
*அன்பு மகன் திலக் குட்டியையும் அரவணைத்துக் கொண்டாயே!*
*தவிக்கின்றோம் நாமிங்கு சிறகொடிந்த பறவைகளாய்!*
*உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (26-03-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மறைவுச் செய்திகேட்டு எமக்கு ஆறுதலளித்த அன்புள்ளங்களுக்கு நன்றிகள்.

மகள்: சோவி,
கணவர்: த.செல்வக்குமார்

மருதங்கேணி வடக்கு, (ஆசிரியர் மருதங்கேணி இ.த.க.பா.),
தாழையடி. (43485(26-14) உறவினர்களும்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா கந்தையாபிள்ளை

(முன்னாள் உரிமையாளர், அன்னம் டை அன் பிரீண்டிங்வேக்)



காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற அருணாசலம் கந்தையாபிள்ளையின் மனைவியுமான திருமதி அன்னம்மா 21-03-2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் அருணாச்சலம - லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகசபை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, சுந்தரம்மா, பார்வதி, திருநாவுக்கரசு, சிவபாக்கியம், செல்லம்மா மற்றும் மாணிக்க தியாகராஜா, முத்துலிங்கம், தனபாலசிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கணேசபிள்ளை (முன்னாள் தபால் ஊழியர் - கனடா), சண்முகசுந்தரம்பிள்ளை, தனலட்சுமி, ஜெயராஜசிங்கம் பிள்ளை (வர்த்தகர்), ஸ்ரீவள்ளிநாயகம்பிள்ளை (பிரான்ஸ்), நாகரட்ணம்பிள்ளை, பாகியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சௌந்தராம்பிகை, நாகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா (முஸ்லிம் கலாசார அமைச்சு), நித்தியலட்சுமி, கலையரசி (பிரான்ஸ்), நிர்மலாதேவி, பாலேந்திரா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற ரவிச்சந்திரன், கலைச்சந்திரன், ஆரியமலர், ஞானச்சந்திரன் ஸ்ரீதேவி (கனடா), சண்முகதாசன் தர்சினி, சிவதாசன் ராதா (லண்டன்), சிறிதாசன் சரஸ்வதி, சண்முகராணி தவராசா, நாகராணி ஸ்ரீலக்ஷ்மன் சுகிதா (நெதர்லாந்து), ஸ்ரீலக்ஷிமி விமலசிங்கம் (மாலைதீவு), கீர்த்திகா சதீஸ்குமார் (பிரான்ஸ்), கீர்த்தீபன் (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), கார்த்திகா, தர்சிகா, அருண், மனகா, லட்சிகன், குபேரன் (இந்தியா), குபேரதி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் அனுஷாந், டிலோசினி, ஆரஞ்சன், சுலக்ஷனா, டிலக்ஷன், திசாகினி, திசீபன், சபிதா, மதுஷன், விவக்ஸ ஷெரிக்ஸ், விதுஷிகா அபிராமிப்பிரியங்கா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (25-03-2005) வெள்ளிக்கிழமை காலை 8.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கணக்கனார் கண்டி,
காரைநகர். தொ.பே.இல.0777-490365 தகவல்: பிள்ளைகள்.
(43441) (46-14-26)

# யாழ்.வலயப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**11வயதுப் பிரிவு**

**ஆண்கள் - 100 மீற்றர்**

ஆர்.விதுஷன் (சென்.ஜோண் பொஸ்கோ), எஸ்.அஜனோசன் (சென்.ஜோண் பொஸ்கோ), ப.தானுரா (புனித றோக் றோ.க.வி)

**75 மீற்றர்**

ஆர்.விதுஷன் (சென். ஜோண் பொஸ்கோ), ம.மயூரன் (சென்.ஜேம்ஸ் ம.வி).

**நீளம் பாய்தல்**

ம.கௌரங்கன் (சென்.ஜோண் பொஸ்கோ), சி.எஸ்.என்ஸ்ரீன் (சென்.பற்றிக்ஸ்), அ.டினோசன் (நாவாந்துறை றோ.க.வி)

**உயரம் பாய்தல்**

எ.எட்வின் (சென்.பற்றிக்ஸ்), எ.பிரஜன்பெனற் (சென்.ஜோண் பொஸ்கோ), என்.மயூரன் (சென்.பற்றிக்ஸ்)

**பெண்கள் - 75மீற்றர்**

பி.பிரியங்கா (சென்.ஜோண்பொஸ்கோ), எஸ்.தில்க்ஷி (சென்.ஜோண் பொஸ்கோ), ச.திஷானா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**100 மீற்றர்**

எஸ்.திலக்ஷி (சென்.ஜோண் பொஸ்கோ), ம.ஜோய் காருண்ஜா (சென். ஜோண் பொஸ்கோ)

**நீளம் பாய்தல்**

எம்.யோய் காருண்ஜா(சென். ஜோண் பொஸ்கோ), எ.கீர்த்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எ.றெபிக்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

ஆர்.பிரியங்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), றோ.ரெபேக்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஏ.காவியா (சென்.சாள்ஸ் ம.வி)

**13வயதுப் பிரிவு**

**ஆண்கள் - 100மீற்றர்**

எ.கவாஸ்கர் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜே.சொலமன் (சென்.ஜோண் கல்லூரி), கே.அனோஜன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**200 மீற்றர்**

ம.மரியரூபன் (சென்.ஜோசப் ம.வி), வி.சுரேன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கே.அனோஜன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

எ.கவாஸ்கர் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), டெ.யோய் யசியேஸ் (சென்.ஜேம்ஸ் ம.வி), ம.மரியரூபன் (சென்.ஜோசப் ம.வி)

**உயரம் பாய்தல்**

ஆர்.வாதுசனன் (யாழ். மத்திய கல்லூரி), எ.கவாஸ்கர் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), ஆர்.எஸ்.லியோன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

**4X100 அஞ்சல்**

சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி

**பெண்கள் - 100மீற்றர்**

பி.ஸ்ரெபி கிறாப் (திருக்குடும்ப கன்னியர் மடம்), பி.ஐஸ்வரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஏ.றதி இஷபில் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**200 மீற்றர்**

சி.கம்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), த.மதுரா (திருக்குடும்ப கன்னியர்மடம்), யோ.பிரியங்கா (வேம்படி மகளிர் கல்லூரி).

**நீளம் பாய்தல்**

எஸ்.ஹம்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எ.ஜி.சுகந்தினி (சென். றோக்ஸ்.ம.வி), இ.பிரிதுஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

ம.றதிசாந்தி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வி.சுவணியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பி.வினோதினி (வேம்படி மகளிர் கல்லூரி)

**15 வயதுப் பிரிவு**

**ஆண்கள் - 100 மீற்றர்**

கே.பாலமுரளி (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.மில்ன்டோ (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எ.றொனிரன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**200 மீற்றர்**

கே.பாலமுரளி (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.மில்ன்டோ (சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஆர்.எட்வேட் எடின் (யாழ்.மத்திய கல்லூரி)

**400 மீற்றர்**

சி.அருள்றாஜ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), பி.மேரிபஸ்ரியான் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கி.ஜெக்ஷன் (நாவாந்துறை றோ.க.ம.வி)

**நீளம் பாய்தல்**

எம்.ஹரீஸ் (யாழ்.மத்திய கல்லூரி), ஏ.எச்.எம்.ஹஷாநாத் (யாழ்.ஒஸ்மானியா கல்லூரி), ஈ.லீனஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

பி.பாலசங்கர் (யாழ்.மத்திய கல்லூரி), ரி.நிரோஜித் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜெ.எரிக் பிரதாப் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**தட்டெறிதல்**

ஆர்.கஜீவன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ரி.லவன் (யாழ்.மத்திய கல்லூரி), ஜெ.றதீன் (யாழ்.மத்திய கல்லூரி)

**குண்டெறிதல்**

ஆர்.முஜினாத் (யாழ்.மத்திய கல்லூரி), ஜெ.றதீசன் (யாழ்.மத்திய கல்லூரி), ஜி.றஜீல்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**ஈட்டியெறிதல்**

ரி.நிரோசன் (யாழ்.மத்திய கல்லூரி), வி.இளங்கோ (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஏ.பிரசன்னா (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

**பெண்கள் - 100மீற்றர்**

ஜஸ்மிலா எட்மன் (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி), எஸ்.சுதர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), கீ.ஜோதிமலர் (சென்.ஜேம்ஸ் ம.வி)

**200 மீற்றர்**

சி.சுதர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜே.சிந்துஜா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), எ.ஜஸ்மிலா (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி).

**நீளம்பாய்தல்**

ச.நிருத்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), சி.சுதர்சனா (வேம்படி மகளிர் கல்லூரி), எ.மொறின் கபினா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**உயரம் பாய்தல்**

எச்.மொறின் ரூபினா (திருக்குடும்ப கன்னியர் மடம்), என்.சிந்துஜா (திருக்குடும்ப கன்னியர் மடம்), பயஸ்.பியட்றிஸ் (நாவாந்துறை றோ.க)

**தட்டெறிதல்**

ஜெ.பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), மை.யுவேமியா(சென்.ஜேம்ஸ்), எஸ்.யசோதா (வேம்படி மகளிர் கல்லூரி),

**குண்டெறிதல்**

ஜெ.பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), ஸ்ரீ.யசோதா (வேம்படி மகளிர் கல்லூரி), எச்.மொறின் ரூபினா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**ஈட்டியெறிதல்**

சிறி யசோதரா (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.மெடோனா (சென்.சாள்ஸ் ம.வி), ஆர்.சோபிஜா (வேம்படி மகளிர் கல்லூரி)

**4X100மீற்றர் அஞ்சல்**

வேம்படி மகளிர் கல்லூரி, திருக் குடும்ப கன்னியர் மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

(3-190)



எல்லைப் படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊரெழு றோயல் அணியினரும் அராலி ஜேம்ஸ் அணியினரும் மோதிய ஆட்டத்தில் ஒரு காட்சி.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டி யாழ். மாவட்டத் திணைக்கள அணிகளுக்கிடையில் நடத்தப்படும் 7பேர் பங்குகொள்ளும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8.30 - விளையாட்டுத் திணைக்களம் எதிர் தபால் திணைக்களம்.

★ காலை 9.30 மணி கல்வித்திணைக்களம் - வலயம் 1 எதிர் சுகாதாரத் திணைக்களம் (வைத்தியசாலை),

★ முற்பகல் 10.30 மணி - திக்கம் வடிசாலை எதிர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

★ முற்பகல் 11.30 மணி பலாலி ஆசிரியர் கலாசாலை எதிர் கல்வியியற் கல்லூரி.

(3-190)

★ ★ ★

எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் வெற்றிக் கிண்ணத்திற்காகத் திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 11 பேர் பங்குகொள்ளும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட - மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் கால் இறுதியாட்டம் இன்று காலை 8 மணியளவில் யாழ். கனகரத்தினம் ம.வி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

★ காலை 8.30 மணி - யாழ். பிரதேச சபை எதிர் யாழ். தபால் திணைக்களம்.

முற்பகல் 11 மணி - யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எதிர் நல்லூர் பிரதேச சபை.

(3-190)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்25

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடி மைதானத்தில் இடம்பெறவுள்ள இச்சுற்றுப்போட்டியில் காலை 8.30 மணிக்கு ஆண்களுக்கான ஆட்டங்களும் பிற்பகல் 4.30 மணிக்கு பெண்களுக்கான ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் 7 கழகங்களும் பெண்களுக்கான போட்டியில் இரண்டு கழகங்களும் கலந்துகொள்ளவுள்ளன.

(3-86)

# மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்25

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகம் அமரர் பொன்னுத்துரை சிவலிங்கம் ஞாபகார்த்தமாக, மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகும் ஆறுபேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களையுடைய இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-202)

# 'எவரெடி' கிண்ண உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் 'எவரெடி' வெற்றிக் கிண்ணத்திற்காக 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான - மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்த சுற்றுப்போட்டியில் 40 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் யாழ்.அணி கால் இறுதிப் போட்டி வரை பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கது.

(3-190)

# வலைபந்தாட்டம்

வலி.வடக்கு,மார்ச்25

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன்.

இச்சுற்றுப்போட்டியில் ஆறு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

(3-86)

# எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம் கலைவாணி-மனோகரா அணிகள் இன்று மோதல்

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காகத் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அராலி கலைவாணி வி.க.வும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மனோகரா வி.கவும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடக்கும் மற்றோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஸ்கந்தா ஸ்ரார் வி.கவும் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க.வும் மோதுகின்றன.

(3-86-190-203)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதல் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அண்ணா விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த டயமன் விளையாட்டுக் கழகமும் மோதின. இரு அணிகளும் தமக்குக் கிடைத்த கோல் பெறும் பல வாய்ப்புக்களையும் நழுவவிட்டன. ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளும் மாற்று அணி கம்பம்வரை பந்தை எடுத்துச்சென்றன. ஆனால் பந்தை கோல் கம்பங்களுக்கு மேலாகவும், பக்கவாட்டாகவும் வெளியில் அடித்தார்களே தவிர எந்த அணி வீரர்களாலும் கோல் பெறமுடியவில்லை. இத்தகைய ஆட்டம் காரணமாக இரு அணிகளுமே ஆட்டம் முடிவடையும் நேரம் வரை கோல் பெறாததால் சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. அண்ணா விளையாட்டுக் கழகம் தனக்குக் கிடைத்த ஐந்து உதைகளையும் சரியான முறையில் உதைத்து கோலாக்கிக் கொண்டது. டயமன்ஸ் கழக அணி வீரர் ஒருவர் உதைத்த உதையை அண்ணா விளையாட்டுக் கழக கோல் காப்பாளர் தடுத்துநிறுத்தினார்.

உதயன்

ஊடக அனுசரணை

இதனைத் தொடர்ந்து அண்ணா விளையாட்டுக் கழகம் 5 இற்கு 4 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். லீக்கைச் சேர்ந்த றோயல் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய ஆறாவது நிமிடம் றோயல் அணியின் இடது முன்னணி வீரர் தட்டிக்கொடுத்த பந்தை வலது முன்னணி வீரர் நேசன் எதிரணி வீரரை ஏமாற்றித் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.

இரண்டாவது கோலை றோயல் அணியின் சதீஸ் பந்தை நேராக எடுத்துச்சென்று கோலாக்கிக் கொண்டார்.

றோயல் அணியின் பசீர் எதிரணியினர் அடித்த பந்தைத் தடுத்துநிறுத்தி முன்நகர்த்தி கோல் ஆக்கினார்.

நான்காம், ஐந்தாம் கோல்களை வலது முன்னணி வீரர் நேசன் தனக்கு தட்டிக்கொடுக்கப்பட்ட பந்தை எதிரணியினரின் தாக்குதல்களில் இருந்து இலகுவாகத் தள்ளி அடித்துக் கோல்களாக்கிக் கொண்டார். முதல் பாதி ஆட்டம் 5 கோல்கள் முன்னணியில் றோயல் அணி இருந்த நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய சுமார் 15 நிமிடங்கள் வரை ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் தடுத்து ஆடியதுடன் றோயல் அணியின் பக்கம் கோல்களை அடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது.

இந்நிலையில் தண்டனை எல்லைக்குள் ஜேம்ஸ் அணி வீரரின் கையில் பந்து பட்டதன் மூலம் ஒரு தண்டனை நேர் உதை றோயல் அணிக்குக் கிடைத்தது. அதனை சேகர் அடித்து றோயல் அணியின் ஆறாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் றோயல் அணியைச் சேர்ந்த சதீஸ் தனக்குப் பின்னணி வீரர் ஒருவர் அடித்துக் கொடுத்த பந்தைப் பெற்று முன்நகர்த்திக் கோலாக்கிக் கொண்டார்.

இறுதியில் றோயல் விளையாட்டுக் கழகம் 7 இற்கு 0 என்ற கோல் கணக்கில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆகக்கூடிய கோல்கள் இந்த ஆட்டத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-86)

## WALK IN INTERVIEW

FROM: Danish Demining Group, Sri Lanka.
Post Title: Paramedic
Qualifications: **Sound experience in the medical field (paramedics)**
Age: **between 20 to 35.**
Duty Station: North & East of Sri Lanka.
Closing Date: 27th March 2005.

All the applicants should come to the following address on Sunday, 27th of March between 12.00p.m. To 3.00p.m.

Address: Danish Demining Group,
Operational Area - Jaffna,
Kuppilan South, Punnalaikattuvan.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective in Sri-Lanka is to contribute towards the goals and objectives of the mine action program for Sri Lanka, which aims to educe the threat of mines and other unexploded ordinance from priority areas. In the beginning of 2005, the total no of DDG employees in Sri Lanka is almost 400 persons.

(C/41805)(42)


## வடமராட்சியில் 'வான்' தோண்டும் பணிகள் இப்போது ஆரம்பம்

கரவெட்டி,மார்ச்25

வடமராட்சியில் கடலிற்குள் 'வான்' தோண்டும் பணிகள் விரைவாகச் செயறபட்டு வருகின்றன.

கடற்றொழிலாளர்களின் படகுகள், கட்டு மரங்கள் போன்றவற்றைக் கரையில் இழுதது விடுவதற்கு வசதியாக 'வான்' எனப்படும் பள்ளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 'சுனாமி' அலைகளின் தாக்கத்தால் அள்ளி வரப்பட்ட கற்கள் இந்த 'வான்'களை மூடிவிட்டன.

இவற்றை மீண்டும் தோண்டுவதற்கான பணிகளில் அவ்வப் பகுதிக் கடற்றொழிலாளர்கள் முயன்றனர். ஆனால், அதற்கு இராணுவத்தரப்பால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் -

யாழ்.அரச அதிபர் பணிமனையில் நடத்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், யாழ்.மாவட்ட இராணுவத் தரப்புச் சந்திப்பினையடுதது மீண்டும் 'வான்' தோண்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது 'வான்' தோண்டுவதற்காக சுப்பர் மடம், இன்பருட்டி போன்ற பகுதிகளில் இயந்திரம் மூலம் மணல் அகழ்வு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஒ-70)


## 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்,

25.02.2005 வெள்ளிக்கிழமை அதிகாலை சிவப்பேறடைந்த எமது குடும்ப விளக்கான

திருமதி **இராசமணி பொன்னம்பலம்** (மணி அக்கா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (26.03.2005) சனிக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"முத்துவாசா"*
*கெருடாவில்,*
*தொண்டைமானாறு.*

**மகள், பேரப்பிள்ளைகள்.**

(43464)(24-14-34-42)



# CARE INTERNATIONAL SRI LANKA

care

## Post-Tsunami Community Recovery & Livelihood Development Program - Jaffna District

**CARE International Sri Lanka, one of the world's largest international relief and development organizations working towards economic and social empowerment of poor and marginalised communities is looking for extremely committed individuals who are willing to put in their best to be part of an energetic team of development professionals engaged in the Tsunami Recovery and Development Program in Sri Lanka.**

### 1.ADVOCACY AND INFORMATION CO-ORDINATOR

Responsible for collecting, documenting, and presenting programme information that will be disseminated across all stakeholders and used for Donor reporting. The reports will create greater awareness of CARE programmes and their achievements. The incumbent will actively lobby stakeholders for recognition and adoption of CARE's work and accomplishments.

### 2.PSYCHOSOCIAL CO-ORDINATOR

He/she will develop and guide the project activities in consultation with the relevant Project Directors and Psychosocial Advisor, facilitate implementation of psychosocial activities based on community consultation and participatory techniques, and identify capacity of suitable Partners & provide technical support where necessary as well as facilitate training and counselling.

### 3.CAPACITY BUILDING CO-ORDINATOR

The CB Co-ordinator should be able to develop and deliver training modules to programme participants. Should be able to identify capacity gaps and fill those gaps and have the ability to understand and deliver identified training programmes.

### 4.MONITORING & EVALUATION COORDINATOR

Responsible for overall monitoring and evaluation of assigned projects by designing and implementing an M&E plan with identification of indicators demonstrating the effect and impact level changes of the projects, identifying tools & methods for gathering information, training, guiding, and assisting project staff in all M&E functions, setting up and maintaining a project information database, promoting gender equity, and coordinating with the Government of Sri Lanka & other organizations in the process of learning & information sharing. Involves extensive field travel.

### 5.GENDER COORDINATOR

Reporting to the Director - Programme Development, the selected candidate will be responsible for researching and addressing gender programme needs within the organization and ensuring that the Gender Based Violence project achieves the required objectives. In addition, the position requires provision of technical guidance to other Care Sri Lanka projects on gender mainstreaming. He/she will play a key role in the implementation of CARE Sri Lanka's Gender Policy as well as the Code of Conduct to prevent harassment and exploitation of programme participants. He/she will also be responsible for establishing strong and consistent relationships with INGOs, NGOs, donor community, gender support professionals, and the media.

Applicants should possess a Degree or Diploma in Social Science from a recognized university/institution, minimum of 03 years' relevant experience in gender development & programming, strong conceptual, analytical, & interpersonal skills, fluency in spoken & written English, and comprehensive report writing skills. Proficiency in Sinhala and/or Tamil, any qualification in women's studies, and experience in working with donors will be advantageous. The position involves extensive field travel.

### 6.LIVELIHOOD COORDINATOR (FISHERY & AGRICULTURE)

The Livelihood Co-ordinators will oversee all livelihoods generation activities under the post-tsunami program under the overall guidance of the Project Director. The Co-ordinators will be required to draw up plans for generating income, provide technical inputs for various areas of livelihood, and oversee implementation of the plans.

### 7. WATSAN CO-ORDINATOR

The Water and Sanitation Co-ordinator would provide technical and planning inputs for provision of critical rehabilitation facilities to programme participants in accordance with the Sphere standards. He/she will oversee a major rehabilitation effort, designing and delivering most of the inputs.

### 8. SHELTER CO-ORDINATOR

The Shelter Co-ordinator will assist in the assessment, design, and implementation of shelter and reconstruction component of CARE's post-tsunami programme. He/she will need to ensure rapid response to the immediate shelter needs of those who lost their homes in the tsunami, address public infrastructure needs, and consider longer-term needs of the community.

### 9. ENVIRONMENT CO-ORDINATOR

The Environment Co-ordinator will advise the post-tsunami programme on environment safety and regeneration. He/she will facilitate implementation of international standards in the post-tsunami rehabilitation efforts and advise programme personnel and measures to enhance the environment-friendliness of efforts geared at delivering water, sanitation, and shelter rehabilitation.

### 10. TEAM LEADER - PROGRAMME SUPPORT

This is a crucial position which will oversee all programme support functions in our Area Offices. He/she will have direct oversight of all operations relating to Finance, Human Resources, Administration, Procurement & Logistics, Asset Maintenance, Transport, and Liaisons. The incumbent must have the ability to plan for and execute a substantial work load which will support the delivery of CARE's programmes.

The candidates should be graduates with appropriate prior experience in the relevant area. All above positions are part of CARE'S post-tsunami programme and located in the actual programme areas covering the North, East, & South. Hence candidates willing to be based anywhere in Sri Lanka and to travel regularly may apply. CARE offers competitive compensation in accordance with prevalent standards.

### 11. TEAM LEADERS - PROGRAMME UNIT - 3 Positions

The Team Leader is responsible for the overall planning and implementation of the project as well as the monitoring of the project activities in the specified area. He/she is accountable for project impact as laid out in the project logical framework and preparation of joint Annual Programme Plan at Provincial level in consultation with the key stakeholders. Effective co-ordination and implementation of the key project components and institutional development/organisational strengthening must be ensured. The Team Leader must effectively manage staff performance & Project resources at provincial level and implement the project monitoring and evaluation plan.

Applicants should possess a Degree in Management, Agriculture, or Social Sciences, 05 years' experience, and be computer literate. Work experience in Management and participatory development in development programmes will be an advantage.

**Employment will be on the basis of renewable One Year Contract.**
**PLEASE APPLY IMMEDIATELY with names, addresses, and telephone numbers of two non-related referees. The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be contacted. Closing date on or before 29th March, 2005**

**WOMEN ARE ENCOURAGED TO APPLY**
**CARE IS AN EQUAL OPPORTUNITY EMPLOYER**

Program Director
Post - Tsunami Community Recovery & Livelihood Development Program
CARE INTERNATIONAL SRI LANKA
No: 15, Kandy Rd,
Jaffna
E-mail: karunakaran@care.lk

# நலிந்த மக்கள் தொழில் தொடங்க வசதியாக நிறுவனங்களின் உதவிகள் அமையவேண்டும்

## பளை அரசியற்றுறைப் பொறுப்பாளர் வலியுறுத்து

பரந்தன்,மார்ச்25

பாதிப்படைந்த மக்கள் தொழில் தொடங்குவதற்கு வசதியாக நிறுவனங்களின் உதவிகள் அமையவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் பளைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன்.

பளை - பச்சிலைப்பள்ளிக் கோட்டத்தில் உள்ள மாசார் கிராம மக்களுக்குப் 'போரூட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்களும் மூன்று உரமருந்து தெளிப்பான் கருவிகளும் வழங்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக மண்டபத்தில் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இ.அசோகன் தலைமையில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட கரிகாலன் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இராணுவ நடவடிக்கையால் இப்பிரதேசத்தில் இருந்து மக்கள் முற்றாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ளனர். அவர்கள் தமது வாழ்விற்காகத் தொழில்களை மேற்கொள்வதற்கு உதவிபுரியும் நிறுவனங்களின் உதவித் திட்டம் பாராட்டத்தக்கவிடயம். பாதிக்கப்பட்ட மக்கள் தொழில் தொடங்க வசதியாக நிறுவனங்களின் உதவித் திட்டங்கள் அமையவேண்டும். இதுவே நிரந்தரப் பயனளிக்கும் - என்றார்.

இந்நிகழ்வில், உரையாற்றிய பச்சிலைப் பள்ளி உதவி அரச அதிபர் க.சிவசிறி கருத்துத் தெரிவிக்கையில்:-

மீளக்குடியமர்ந்துள்ள இப்பிரதேச மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த உபகரணங்கள் பெரும் உதவியாக அமையும். விவசாய உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களை இவர்கள் வாங்குவதற்கு முடியாதவர்களாகவே இருக்கின்றனர். எனவே, இதுபோன்று இப்பிரதேச கிராமங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏனைய அரசசார் பற்ற நிறுவனங்களும் உதவிகளை வழங்க முன்வரவேண்டும். இதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும் - என்றார். (ஒ-352-203)

## பங்குனித் திங்கள் உற்சவம்

முழங்காவில்,மார்ச்25

பூநகரி, செவ்வியாதீவு கண்ணகை அம்மன் ஆலயம், முழங்காவில் முத்துமாரி அம்பாள் ஆலயம், பொன்னாவெளி கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றில் எதிர்வரும் திங்கட்கிழமை பங்குனித் திங்கள் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மேற்படி ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அன்றையதினம் வன்னிப்பிரதேசத்திலுள்ள ஏனைய ஆலயங்களிலும் பங்குனித் திங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.(ஒ-323)



ஒட்டுசுட்டான் கிராமிய அபிவிருத்தி வங்கியின் வாடிக்கையாளர் ஊக்குவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் வங்கிக் கடன் அடிப்படையில் தையல் இயந்திரத்தை வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒட்டுசுட்டான் ம.வித்தியாலய ஆசிரியை விமலா வழங்குவதையும் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் மேல் கணக்கில் வைத்துள்ள மாணவர்களில் ஒருவருக்கு ஒட்டுசுட்டான் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## திருமுக ஆண்டவர் ஆலயத் திருவிழா

புதுக்குடியிருப்பு,மார்ச்25

புதுக்குடியிருப்பு திருமுக ஆண்டவர் தேவாலயத் திருவிழா கடந்த 17ஆம் திகதி பங்குத் தந்தை வண.பிதா லூயில மோர்வட் தலைமையில் நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகி மறுநாள் திருச்சிலுவைப் பாதையுடன் முடிவடைந்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய விசேட திருப்பலியும் அன்றையதினம் இடம்பெற்றது. (ஒ-358)

# ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

பரந்தன்,மார்ச்25

கரைச்சிப் பிரதேச சபை முரசுமோட்டை உப பணிமனையின இலவச ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்துகள் போதியளவில் இல்லாததால் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தென்னிலங்கையில் இருந்தே ஆயுர்வேத மருந்துகள் வரவழைக்கப்பட்டு மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில், குறைந்தளவு மருந்துகளே மேற்படி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், நோயாளருக்குத் தேவையான மருந்துகளை வழங்கமுடியாதுள்ளது. ஆகவே, அவர்கள் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு மருந்தகங்கள் மற்றும் தனியார் மருந்தகங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் இதுதொடர்பில் அக்கறை எடுத்து மீள்குடியமர்த்த மக்களுக்குப் போதியளவு மருந்துகளை வைத்திய சாலைக்கு வழங்க ஆவன செய்யவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-352)




# பச்சிலைப்பள்ளியில் தற்காலிக வீடுகள்

பரந்தன்,மார்ச்25

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகம் மீளக்குடியமர்ந்த மக்களுக்காக 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் 38 தற்காலிக வீடுகளை அமைத்துள்ளது. 'போரூட்' நிறுவனத்தின் நிதி உதவியுடனேயே இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாகப் பளைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மாசார், புலோப்பளை ஆகிய கிராமங்களில் குடியமர்ந்த 38 குடும்பங்களுக்காகவே இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மாசார் கிராமத்தில் 31 குடும்பங்களும் புலோப்பளையில் 7 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-352-203)

# எஞ்சிய வைக்கோலை எரிக்காது வயலுக்கு இட்டுப் பயன்பெறலாம்

## விவசாய அதிகாரி அறிவுறுத்தல்

பரந்தன்,மார்ச்25

அறுவடையின் பின்னர் நெற்பயிரின் அடிக்கட்டை மற்றும் எஞ்சிய வைக்கோல் போன்றவற்றை எரிக்காது மீள் உரமாக விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் எஸ்.கோகுலதாசன்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

நெல் அறுவடையின் பின்னர் வயலில் இருக்கும் பயிரின் மிகுதிப் பகுதி, எஞ்சிய வைக்கோல் போன்றவற்றை வயலில் இடாமல் விவசாயிகள் அவற்றை எரித்துச் சாம்பராக்கிவிடுகின்றார்கள். இதனால், நெல் விளைச்சலில் நஷ்டம் ஏற்பட்டுவருகிறது.

நெற்பயிருக்கு இரசாயன உரவகைகள் மட்டும் போதுமானவையல்ல. பயிருக்கு இயற்கைப் பசளைகளும் பிரதானமாகத் தேவைப்படுகின்றன. எனவே, விவசாயிகள் இதனைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஆகவே, எஞ்சிய வைக்கோலை வயலில் இட்டு வைக்கோலில் இருக்கும் போசனைகளைப் பயிருக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அத்துடன், இயற்கை உரங்களையும் பயிருக்கு இட்டு நல்ல விளைச்சல் பெறலாம் - என்றார் அவர். (ஒ-352)



பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளர் ந.பாலசுப்பிரமணியத்திற்குப் பிரியாவிடையும் புதிய முகாமையாளர் து.இரத்தினசிங்கத்திற்கு வரவேற்பும் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அப்போது புதிய முகாமையாளரிடம் ஓய்வுபெறும் முகாமையாளர் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்புகளைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு, பொதுச்சபை உறுப்பினர் பொ.தங்கராசா, கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ நிர்வாக சேவை இணைப்பாளர் மயூரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: பூநகரிச் செய்தியாளர்)*

# 'போரூட்' நிறுவன அனுசரணையுடன் முல்லைத்தீவில் பயிற்சிநெறிகள்

## தொழில்நுட்ப நிறுவனம் நடத்துகிறது

வட்டக்கச்சி,மார்ச்25

கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்ப நிறுவனம் 'போரூட்' நிறுவனத்தின் எச்.ஆர்.டி.திட்ட அனுசரணையுடன் முல்லைத்தீவில் தனது பயிற்சிநெறிகளை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாகக் கைவேலியில் கட்டடத் தொழிலாளர் பயிற்சிநெறியும் வள்ளிபுனத்தில் மரவேலைப் பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வள்ளிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் க.சோதிமுருகேசு தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த சு.இராமநாதன் ஏற்றிவைக்க நிறுவனக் கொடியை ஆளுநர் சபை உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவருமான இ.கணேசபிள்ளை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பொதுச்சுடரை 'போரூட்' நிறுவன முல்லைத்தீவு மாவட்டத் திட்ட இணைப்பாளர் குணாளன், வள்ளிபுனம் கிராமசேவையாளர் சிவராசா ஆகியோ[illegible].

நிகழ்வில் [illegible] கொண்ட புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர், இணைத் தலைவர் இ.கணேசபிள்ளை [illegible] நிறுவன ஆளுநர் சபை உறுப்பினர் [illegible], 'போரூட்' நிறுவன எச்.ஆர்.டி [illegible] திட்ட இணைப்பாளர் உதயனன், கிராமசேவையாளர் சிவராசா மாணவன் கோணேஸ்வரன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். (ஒ-405-203)

## அறிவித்தல்

4388ஆம் இலக்கத்தில் திருமதி கெங்காதரன் சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ். முகதாவில் முடிந்த உறுதியால். வட்டுக் கோட்டை கிழக்கு. சித்தன்கலட்டி என்னும் காணி (12 பரப்பு 13குளி) மாரிமுத்து மகேசனுக்கும் திருமதி பரமேஸ்வரி மகேச னுக்கும் உரியது. எனவே. இக்காணியை மோசடியாக விற் பதை நம்பி எவரும் விலை கொடுத்து வாங்கினால். சட்டப்படி இந்த உறுதி செல்லுபடியாகாது என இத்தால் அறியத்தரப் படுகின்றது.

உரிமை கோருவோர் இது பற்றி விளக்கம் பெறுவதற்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மு.திருநாவுக்கரசு,**
**சட்டத்தரணி, 127/7, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**
(43461)(26-14-15)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தாரண வருஷம் மாசித் திங்கள் 12ஆம் நாள் (24-02-2005) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**சபாபதி பொன்னுத்துரை**
(கலேவெல முதலாளி)



அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (25-03-2005) வெள்ளிக்கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும வீட்டுக்கிருத்தியம் நாளை (26-03-2005) சனிக்கிழமை முற்பகல் அன்னாரின் இல் லத்திலும் நடைபெறும். அந் நிகழ்வு களில் எமது உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மில் லேன்,
பீரம்படி, கொக்குவில்.
(43361)(26-14-15)

- திருமதி பொ.தங்கரத்தினம் (மனைவி).



## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.05.1911 மறைவு 03.04.1996
திதி: 25.03.2005

அன்பின் திருவுருவாய்
அகத்தின் தலைவியாய் விளங்கி
எம்மையெல்லாம் ஆதரித்து
அன்பு காட்டிய எம் அம்மாவே!
நீங்கள் விண்ணில் வாழவென
விரைந்துதான் விட்டீர்களே!
காலமது சென்றாலும் மாறாது
உங்கள் நினைவு!

**திருமதி அபிராமிப்பிள்ளை வேலுப்பிள்ளை**

இலங்கா வாசா.
507, கண்டி வீதி.
சாவகச்சேரி வடக்கு.

(43305) (54-11-16)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 . 11 . 1953



மறைவு 23 . 02 . 2005

**திருமதி இராஜகுமாரி கோவர்த்தனராஜா (ராதா)**

எங்கள் வீட்டின் ஒளி விளக்கே !
எமது பாசத்தின் உறைவிடமே !!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தும்
அம்மா என்றழைக்க எமக்கினியாருளர்?
எங்களிடமிருந்து உங்களைக் காலன் கவர்ந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எமை
விட்டுச்செல்லாது !
ஆத்மா சாந்தி அடைவதாக!

34/3, உடையார் லேன்,
பழம் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(43401) (56-11-16)


## பல்கலை ஊழியர் சங்கம் 'சுனாமி' நிதி வழங்கியது

யாழ்ப்பாணம்,மார்ச்25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென யாழ்.பல்கலைக்கழக ஊழி யர் சங்கம் 2லட்சத்து 17ஆயிரத்து 130 ரூபா நிதியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யிடம அண்மையில் வழங்கியது. இப்பணத்தைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொருட்பாளர் ந.கண்ணனிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-12)

## நினைவு மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்25

வாழ்வகத்தின் நிரஞ்சனா நினைவு மண்ட பத் திறப்பு விழாவும் சிறப்புமலர் வெளியீடும் இனறு வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந் துள்ள வாழ்வகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுரு கனும் சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திரு மதி ஆனந்தி சிவஞானசுந்தரம், ஐ.ஐ.எஸ். கண னிக் கற்கை நிறுவன இயக்குநர் கு.விக்கி னேஸ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஒ-202)

## மதில் இடிந்து வீழ்ந்து இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

வீட்டு மதில் இடிந்து விழுந்ததில் படுகாய மடைந்ததாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு ஆபத்தான நிலையல் யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த எஸ்.இர விச்சந்திரன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் தனது வீட்டின் முன்பாக உள்ள மதிலில் ஏறினார் என்றும் அப்போது அது இடிந்து விழுந்ததில் அவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் - கூறப்பட்டது. நேற்று நள்ளிரவுவேளை அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக் கப்பட்டது. (எ-13)


### உடன் விற்பனைக்கு

நவீன முறையில் பிஸ்கட் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் விற்பனைக்கு உண்டு. மாக் குழைக்கும் இயந்திரம் மற்றும் அச்சு, மின்சாரத் தில் இயங்கும் அவன், பக்கிங் இயந்திரம் உட்பட உண்டு. (21-26-14-15)

தொடர்புகளுக்கு: **0777 112918.** (43367)

### தேவை

மர அரிவு ஆலையில் வேலை செய்வதற்கு 'மேயின்வாஸ்' தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தூர இடமாயின் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **0777 112918** [43358] [21-14-15-25]

### உடனடியாகத் தேவை

கண்டி வீதி, கச்சேரியடியில் இயங்கிக் கொண்டிருக்கும் விஜிதா ஸ்ரோர்ஸ் அன் நிரோமா கொமினிக்கேசன் சென்ரருக்கு போட்டோக் கொப்பி, ரெலிபோன் ஒப்பரேட்டர் பணி தெரிந்த அனுபவமிக்க பெண்பிள்ளை தேவை. கணககு விவரத்தில் அனுபவம் முக்கியம். *தொடர்பு:* 92, கண்டி வீதி, கச்சேரி, யாழ். (43443)

T.P.: 222 7096, 077 6111419.

### யாழ்ப்பாணம் → கொழும்பு → யாழ்ப்பாணம்

சகல விமான சேவைகளுக்குமான விமானப் பயணச சீட்டுக்களை எந்நேரமும் விசேட கழிவில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சந்து ரவல்ஸ்,**
**புதிய உயர் கல்லூரி வளாகம்,**
**95, ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

T.P.NO.: 021-222-3208,
077-3144358
077-3144762
(26-14-15-39)(43381)

### ஸ்ராறின் புதிய வெளியீடுகள்

**விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்**

ஆசிரியர் **இ.நிர்மலன்.**

- விரிவான பாடநூல்கள்
- பரீட்சை வழிகாட்டிகள்
- விஞ்ஞான விளக்கங்கள்
- மாதாந்தப் பரீட்சை வினாத்தாள்கள் (இலவசம்)

*தரம் 1 முதல் 6 வரை சகல பாடங்களும் அடங்கிய பரீட்சை வழிகாட்டி நூல்கள் அனைத்தும் சகல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.*

தொடர்புகளுக்கு:
T.P.: **011613078**
CAN: **0777 413990** (4345(56-11-14)



## 9ஆவது ஆண்டு நினைவு முகம்



அமரர் **முருகேசு பாலசிங்கம்**
(சந்தம்புளியடி- காரைநகர்)
(2005-03-25 இன்று 9ஆவது ஆண்டு நினைவுதினம்)

நெஞ்சில் உங்களை நீள நினைத்து வாழ்வதால்
நெருங்கிடும் துன்பமெல்லாம் தூரவிலகி ஓடுதப்பா!
அஞ்சேலென அபயமளித்து நீங்கள் அகத்திலிருப்பதால்
அவனியில் "வாழ்வாங்கு வாழும" சிறப்பு சேருதப்பா!

மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன் B.A. HONS
(மகன்)
118/2, சிவராஜா அவனியூ,
பலாலிவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் கலந்த:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(43439)(46-14-15-26)



## கேள்வி கோரல்

**வீடமைப்பு மற்றும் கைத்தொழில் நிர்மாண கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு**
**கட்டடத் திணைக்களம்**

1. பருத்தித்துறை, பிரதேச செயலகக் கட்டடம், கட்டம் II முதல் பகுதி நிர்மாண வேலைகளுக்கான பொறியிடப் பட்ட கேள்விகளைக் கட்டடத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் கோருகிறார். 2005-04-11ஆம் திகதி மு.ப.10.00 மணி வரை மாத்திரம் கேள்விகள் பெற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்)* 2005-04-07 ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்ட ணமான ரூபா ஆயிரம் (ரூபா 1000/-) செலுத்திப் பெற்றுக் கொண்ட ஆவணங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. தகைமையுள்ள கேள்விதாரர்கள் பின்வரும் தகைமை களுக்கமைய இணங்கல் வேண்டும். தரம் M6 அல்லது அதற்கு மேல் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய பதிவு மற்றும் நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தரப் படுத்தல் திட்டத்தின் கீழுள்ள கட்டட நிர்மாண ஒப்பந்த காரர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் மற்றும் இலங்கை தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் (NCASL) அங்கத் துவத்தையும் கேள்விதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமுன் ஒப்பந்தகாரர் களின் பதிவுப் புத்தக மற்றும் (NCASL) இன் அங்கத் துவ அட்டையையும் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்களை, *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலு வலகத்தில் (யாழ்ப்பாணம்)* இலவசமாகப் பார்வையிட லாம்.
4. கேள்விகள் மூடப்படும் திகதியில் இருந்து 90 நாள்கள் வரை கேள்விகள் செல்லுபடியாகும்.
5. கேள்விப் பிணையான ரூபா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் (150,000/-) மாத்திரம் சேர்த்துக் கேள்விகள் சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.
6. கேள்விகள் மூடப்படும் நேரத்துக்கு முன்பு கிடைக்கக் கூடியவாறு பத்தரமுல்ல "செத்சிரிபாய" கட்டடத் திணைக் களம் கேள்விச் சபைத் தலைவருக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவோ பொறியிடப்பட்ட கேள்வ களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
7. கேள்விகள் மூடப்பட்டபின் உடனடியாகப் பத்தரமுல்ல, செத்சிரிபாய, இரண்டாம் மாடியிலுள்ள கட்டடத் திணைக களத்தின் ஒப்பந்தக் கிளையில் கேள்விகள் திறக்கப் படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்குக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. தாமதித்துக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது எனவும் மற்றும் பாதுகாப்புப் பரிசீலனைக் குக் கேள்வி மூடப்படுவதற்கு நிரலிடப்பட்டுள்ள நேரத் திற்கு ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலத்திற்கு முன் னா "செத்சிரிபாய" வளவை வந்தடைதல் வேண்டுமெனக் கேள்விதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
9. மேலதிக விவரங்களுக்காகத் தயவுசெய்து *பிரதம பொறியிய லாளர் (யாழ்ப்பாணம்), கட்டடத் திணைக்களம், கடற் கரை வீதி, யாழ்ப்பாணம்* தொடர்புகொள்ளவும்.

**W.S. மொல்லிகொட,**
கட்டடப் பணிப்பாளர்,
கட்டடத் திணைக்களம், "செத்சிரிபாய",
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

(சி-41697)(26-14-16)

# இறங்குதுறை வீதியைப் புனரமைக்க அமைச்சிடம் மக்கள் வேண்டுகோள்

ஊர்காவற்றுறை,மார்ச்25

ஊர்காவற்றுறை, கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறை வீதியைப் புனரமைத்துத் தருமாறு வடக்கு - கிழக்கு மாகாணப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கையொப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இறங்குதுறை வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாகக் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கு வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் வாகனங்கள் சென்று வருவதில்லை. இதனால், அனலைதீவு, எழுவைதீவிலிருந்து வரும் பயணிகள் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து சுமார் 5 மைல் தொலைவில் உள்ள ஊர்காவற்றுறை நகரிற்குத் தமது பொதிகளைச் சுமந்தவண்ணம் கால்நடையாகச் செல்லவேண்டியுள்ளது.

இதனால் சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் உட்படப் பொதுமக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இது தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, எமது கோரிக்கைகளைக் கருத்திலெடுத்து கூடிய விரைவில் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-16)



உலக வங்கிக் கடன் உதவியுடன் 'நியாப்' நிறுவனத்தினால் உடுப்பிட்டி தெற்கில் நிறுவப்பட்ட பொதுநோக்கு மண்டபம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. பூர்த்திசெய்யப்பட்ட கட்டடத்திற்கான உரிமப்பத்திரத்தை 'நியாப்' பிரதி மாவட்டப் பணிப்பாளர் பாலகிருஸ்ணனிடமிருந்து உடுப்பிட்டி தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் செ. தயானந்தன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். இதற்கான பெறுமதிமிக்க காணி உடுப்பிட்டி நலன்புரிச் சங்கத்தால் அன்பளிக்காக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கட்டடத்தைத் திறந்துவைத்த கரவெட்டிப் பிரதேச செயலர் சத்தியசீலனையும் கிராம அபிவித்திச் சங்கச் செயலாளர் சந்திரசேகரத்தையும் மற்றும் பிரதேச செயலக அலுவர்களையும் படத்தில் காணலாம்.

## பிரதேச செயலகத்துக்கு 'பக்ஸ்' இயந்திரம்

தென்மராட்சி,மார்ச்25

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு தொலைநகல் இயந்திரம் (பக்ஸ்) கிடைத்துள்ளது.

யாழ். செயலகத்தினால் அண்மையில் தொலைநகல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தில் தொலைநகல் இயந்திரம் இல்லாததால் அவசர கடிதங்கள் தனியார் நிறுவனங்கள் ஊடாகப் பணம் செலுத்தி அனுப்பப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# சுன்னாகம் கூ.சங்கக் காணியில் மண்டபம் அமைக்கச் சம்மதம்

வலி.தெற்கு,மார்ச்25

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தால் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்தைச் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் அமைப்பதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாசார மண்டபம் அமைக்கப்படும் பட்சத்தில் அதற்குத் தேவையான காணி தம்மிடம் உண்டு எனவும் -

இதற்கென ஐந்தரைப் பரப்புக் காணியை வழங்கத் தயாராக இருப்பதாகவும் -

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் சி.குமாரவேல் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்திணைக்களத் தலைவர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெற்றபோது சி.குமாரவேல் இந்த உறுதி மொழியினை வழங்கினார்.

கலாசார மண்டபத்தை நிறுவி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதனைப் பராமரிக்கவும் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கலாசார மண்டபம் அமைக்கும் பணிகளுக்கான 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு யாழ். அரச அதிபரினால் மேற்கொள்ளப்படும்போது அதில் 10 லட்சம் ரூபாவைக் கலாசார மண்டபம் அமைப்பதற்குப் பொறுப்பானவர்கள் பொறுப்பேற்க வேண்டி இருக்கும் என பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கூறியுள்ளார். (ஒ-152)

# இலவசப் பொருள்கள் அபேஸ்; நுகர்வோருக்கு ஏமாற்றம்!

தென்மராட்சி,மார்ச்25

நுளம்புச் சுருள் மற்றும் பற்பசை போன்றவை வாங்கும்போது வழங்கப்படும் இலவசப் பொருள்கள் வர்த்தகர்கள் சிலரால் எடுக்கப்பட்ட பின்பே விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் குறைகூறுகின்றனர்.

ஒரு ரக நுளம்புச் சுருள் பெட்டியுடன் முகச்சவர அலகும் (ஷேவிங் செற்) மற்றொரு ரக பற்பசையுடன் "சம்போ" பைக்கற்றுக்களும் வைக்கப்பட்டுள்ளதாக அவற்றின் உறைகளில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பாலான கடைகளில் இப்பொருள்களை வாங்கும்போது இலவச இணைப்புகள் இல்லாத நிலையிலேயே அவை விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இலவச இணைப்புகளைத் தனியாகச் சிலர் விற்கின்றனர் என்று அறிய முடிகிறது.

சில வர்த்தக நிலையங்களில் இந்த இலவச இணைப்புக்ள் பொருள்களுடன் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

## அழக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.மாநகர சபையினால் பிரமாண்டமான முறையில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், உரத் தொழிற்சாலை அமைப்பற்கான அடிக்கல் நடும நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

யாழ். திறந்த வெளிப்பகுதியில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான அடிக்கல்லை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் காலை 9.30 மணியளவில் நட்டுவைத்தார்.

அதனைத் தொடர்ந்து காக்கைத்தீவுப் பகுதியில் அமைக்கப்படவுள்ள உரத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லினையும் யாழ். அரச அதிபர் நட்டார். இந்த நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா, முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-7)

## சுனாமி நிதி உதவி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் 2 லட்சத்து 17ஆயிரத்து 130 ரூபா நிதியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையிடம் அண்மையில் வழங்கியது. இப்பணத்தைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் பெற்றுக்கொண்டார். (ஒ-12)

# விளைபொருள்களுக்கு எடை குறைக்கும் சந்தை நடைமுறையை மாற்றுக!

## விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்25

சந்தைகளில் விற்பனைக்காக எடுத்துவரப்படும் விளைபொருள்களில் 10 கிலோவுக்கு ஒரு கிலோவைக் கழிவுக்காக கழிக்கும் நடவடிக்கையால் விவசாயிகள் பாரிய நட்டம் அடையவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. ஆகவே, இக்கழிவு முறையை எவருக்கும பாதிப்பின்றித் திருத்தச் சம்பந்தப்பட்டவர்கள் ஆவண செய்யவேண்டும்.

- இவ்வாறு உடுவில் பிரதேச செயலாளரிடம் விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

உடுவில் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

மரவெள்ளிக்கிழங்கு, கரணைக்கிழங்கு போன்றவற்றுக்கே 10கிலோவுக்கு ஒரு கிலோ வீதம் முன்னர் எடையில் கழிவு செய்யப்பட்டது. இந்தக் கிழங்கு வகைகளில் ஒட்டியிருக்கும் மண்ணின் எடைக்காக இந்த எடைக் குறைப்புச் செய்யப்படுவதாகக் கூறப்பட்டது.

ஆனால், தற்போது ஏனைய விளைபொருள்களுக்கும் வியாபாரிகள் இதே நடைமுறையைக் கடைப்பிடித்து எடை கழிப்பு செய்கிறார்கள். உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் இந்நடவடிக்கையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - இவ்வாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் உடுவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பவநீதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-68)

## கிராமப்புறப் பகுதிகளுக்கு அரச உதவியுடன் பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்25

பொதுப்போக்குவரத்துச் சேவையில்லாத கிராமப் பகுதி வீதிகளுக்கு அரச உதவியுடன் போக்குவரத்துச் சேவை நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினைப் போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எடுத்துள்ளது.

இதற்கென நாடளாவிய ரீதியில் 100 கிராமிய வீதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

அரசின் உதவியுடன் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கவுள்ள பிரதேசங்கள் அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பிரதேச செயலர் ஊடாகப் பெற்று விண்ணப்பிக்குமாறு அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

மேற்படி செயலாளரின் கடிதம் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-185)

## சுனாமியால் பாதிப்புற்ற மாணவருக்கு சைக்கிள்

கரவெட்டி,மார்ச்25

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற குடும்பத்தில் உள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

குடும்பத்தில் ஒருவர் வீதம் நாகர்கோயில், குடத்தனை, மணற்காடு, கற்கோவளம், பருத்தித்துறை, இன்பருட்டி, சுப்பர்மடம், சக்கோட்டை, திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆதிகோயில், தொண்டைமானாறு ஆகிய பகுதிகளைக் சேர்ந்த மாணவர்களுக்கே மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியது. (ஒ-70)

## நிர்வாக அலுவலர்கள் இடமாற்றம்

வலி.தென்மேற்கு,மார்ச்25

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம் இம்மாதம் முதல் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். பாலசுந்தரம் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தராக இடமாற்றம் பெற்றுள்ளார். திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இந்த இடமாற்ற உத்தரவை வழங்கியுள்ளார். (ஒ-135)

# கல்யாண சுந்தர விரதம் இல்லற பந்தத்தைத் தரும்

பல காலமாக ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கிடையில் மாண்டு மடிகின்றனர். அவர்களுடைய மனத்துயரைத் துடைப்பதற்கும் அவர்களுக்கு ஆத்மீக சாந்தியை அளிப்பதற்கும் இறைபக்தியே இணையற்ற ஔடதமாகும். இளைஞரும் முதியோரும் ஆண்களும் பெண்களும் தனவந்தரும் ஏழைகளும் மன அமைதியை இசை என்னும் இன்பசாகரத்தில் நீந்தி இறைபக்தியைச் சுவைத்து இனிய தமிழில் எழுதப்பெற்ற தேவார திருவாசகங்கள், தோத்திரப் பாடல்களைக் காலையிலும் மாலையிலும் கூட்டு வழிபாடு செய்வதன் மூலம் பெறமுடியும்.

இறைவன் வாக்கேயாகும். அவை மந்திர ஆற்றல் உடையன. மெய்யன்போடு முறையாக ஓதிவழிபடுபவருக்கு இடர்நீக்கி இன்பம் அருளிக் காக்கவல்லன.

சிவபிரானைக் கல்யாண சுந்தரமூர்த்தியாக வழிபட்டுப் பங்குனி உத்தர நாளில் அனுட்ஷ்டிக்கப்படும் விரதம் இது. பங்குனி மாதத்தில் பூமி மீனராசியில் நிற்க, சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கன்னிராசியில் நின்று பூரணகலைபெற்று ஏழாம் பார்வையாகப் பூமியைப் பார்ப்பதால் இத்தினம் விசேடமானது.

மதுரையில் மீனாட்சியம்மையைச் சுந்தரேசப் பெருமான் திருமணம்செய்த நாள் இதுவாகும்.

## இன்று பங்குனி உத்தரநாள்

ஏனைய மதத்தவர்களாகிய கிறிஸ்தவர்களுடைய இல்லங்களில் விவிலிய நூலும் முஸ்லிம்களுடைய இல்லங்களில் புனித குர்ஆனும் இருப்பதுபோல எம்மவர் இல்லங்களைத் தேவார திருவாசகங்கள் அலங்கரிக்குமானால் எமக்குச் சாந்தி பிறக்கும்; சஞ்சலம் நீங்கும். இறைவனின் அருட்பிரசாகரத்தில் ஆத்மீக ஈடேற்றத்தை அடைவோம். திருமுறைப் பாடல்கள்

இராமர் சீதையைத் திருமணம் செய்துகொண்டதும் இதே நாளில்தான். இவ்விரதம் அனுஷ்டித்ததன் பயனாகத் திருமால் திருமகளையும் பிரமா சரஸ்வதியையும் இந்திரன் அயிராணியையும் சூரியன் உஷாவையும் அமிர்தவல்லி, சுந்தரவல்லி கந்தவேளையும் சீதாதேவி இராமரையும் அடையப்பெற்றனர்.

நீண்டநாள் திருமணம் தடைப்பட்டுள்ள ஆண், பெண் இருபாலாரும் இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டித்துத் தம்பதி பூஜையும் செய்தால் விரைவில் திருமணப் பேறு கிட்டும். புத்திரப்பேறு இல்லாதோரும் இவ்விரதத்தை நோற்று மக்கள் பேறு அடையலாம். இரவில் ஒருபொழுது பழமும் பாயசமும் உட்கொள்வது விதி. இயலாவிடில் மத்தியானம் ஒருபொழுது போசனம் செய்யலாம்.


வசந்தராணி சண்முகம்
காரைநகர்

எதிர்கால பிரஜைகளாகிய மாணவர்களின் உள்ளங்களில் இசையின் மூலம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடமுடியும். தேவாரம் திருப்புகழ், திருவாசகம் தோத்திரப் பாடல்கள் போன்றவற்றின் தேனிலுமினிய நீரைப்பாய்ச்சி அவ்வித்துக்களைச் செழித்து வளரச்செய்வோம். அளப்பரிய ஆளுமையும் ஆற்றலும் அறிவும் படைத்த மாணவர் சமுதாயத்தை ஆத்மீகத்தின் அடிப்படையில் ஆக்கப்பணிகளில் பண்புடன் ஈடுபடச் செய்வோம். சைவம் வளரத் தமிழ் வளரும். தமிழ் வளர எமது கலைகளும் வளரும் அன்பும் அறமும் பண்பும் பணிவும் துன்பத்திலும் இன்பத்தை துலக்கும் துணிவும் எம்மவரிடையே பரவும். *

# நீங்காத நினைவுடன்

# ௯0 நாள்கள்

# அமரர் முருகேசு பிரதீப்



அன்னை மடியில்
11-08-1983

கோரப்பிடியில்
26-12-2004


போய் வருகிறேன்– என
சிரித்து ஓடினாய்
இன்றுடன் 90 நாள்கள்
நீ வரவே இல்லையடா–
பிரதீப்
அழகான உன் சிரிப்பு
அழியாமலே உனை
கடலரக்கன்
கவர்ந்து சென்றானே!
துடிக்கின்றது
நீ வரமாட்டாய்– என
உணர்ந்தும் – உன்
வரவுக்காய் ஏங்கும்
உன் இனிய உறவுகள்.

**சுனாமியின் கோரப்பிடியில் எமை விட்டுச் சென்ற எமது அன்புச் செல்வத்தின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி, துயரில் பங்குகொண்ட நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் கலந்த நன்றிகள்.**

'திருப்பதி'
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**இனிய உறவுகள்.**

(43371) (39-14-11)




நீங்களும் இப்படித்தானா?
உங்கள் விருப்பத்தை
மட்டுமே நினைக்கிறீர்களா?
மற்றவர்களுடைய விருப்பங்களைத்
தடை செய்வது, அவர்கள் மனதைத்
துன்பப்படுத்தும் என்பதை அறிவீர்களா?
உங்கள் விருப்பங்கள் என்றபெயரில் செய்பவை,
மற்றவர் கைகளைக்
கட்டிப் போடுவதாக இருந்தால்...

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!
வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!
சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்
சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை
யோசித்துப் பாருங்கள்.
வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க
நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை
இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

எச்சரிக்கை: உங்கள் அன்பு மற்றொருவருக்குப்
'பொன்விலங்கு' போலானால் - அது அன்பே அல்ல!

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

Thompson Associates


# அமெரிக்க - இந்தியப் படை நகர்வுக்கும் விலகலுக்கும் களம் அமைத்த சுனாமி



"இலங்கையில் சுனாமிக்குப் பின்னரான அரசியலும் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகளும்" என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசியல் - சமூகவியல் துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றிய உரை இது. யாழ். மாநகர நூலகசபை ஏற்பாடுசெய்து நடத்திய கருத்தரங்கில் இந்த உரையை அவர் வழங்கியிருந்தார். அதன் முற்பகுதி இன்று பிரசுரமாகின்றது.

சுனாமி தாக்கத்தின் வடுக்கள் நிரந்தரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. ஆயிரக்கணக்கான மக்களையும் கோடிக்கணக்கான சொத்து இழப்புக்களையும் ஏற்படுத்திய சுனாமி இலங்கை அரசியலிலும் நிரந்தரமான, தற்காலிகமான, பாதிப்புக்களையும் ஏற்படுத்தத் தவறவில்லை. பொதுவாகவே இயற்கை மனிதனுக்கு அவ்வப்போது தனது இயல்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்துவதில் பின்னிற்பதில்லை. மனிதன் இயற்கையை அளவிடவோ, புரிந்துகொள்ளவோ முடியாதவனாக இருப்பதோடு, அதிக பலவீனமானவனாகவும் காணப்படுகின்றான். இனவெளி, இனப்பகைமை, இனக்குரோத உணர்வோடு வாழும் இலங்கை மனித சமூகத்துக்கு சுனாமி அதிக போதனைகளை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், அப்போதனைகள் மீண்டும் தவறவிடப்பட்ட தொன்றாகவும் இனப்பகைமையின் இன்னொரு பரிமாணத்தை உருவாக்குவதாகவுமே சிங்கள - பௌத்த இனவாத, தீவிரவாத சக்திகள் செயற்படுகின்றன.

சுனாமிக்குப் பின்னரான இலங்கை அரசியலில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் அதிக தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அதன்படி சர்வதேச சமூகத்தின் கவனம் தென் இலங்கையில் நெருக்கடியையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தியுள்ளன. சர்வதேச சமூகத்தைத் தவிர்த்து இலங்கையின் அரசியலையோ இனப்பிரச்சினைக்கான தீர்வினையோ, பொருளாதார மீளமைப்பையோ மேற்கொள்ள முடியாத நிலை மேலும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.



### சர்வதேச சமூகத்தின் தலையீடு

சர்வதேச சமூகத்தின் தலையீடு சுனாமிக்குப் பின்பு மிக அதிகமாக இலங்கைத் தீவின் அரசியலில் ஏற்படுத்திவருகின்றது. சர்வதேச சமூகத்துக்கு நிகராகப் பிராந்திய சக்தியில் தலையீடும் ஏற்பட்டுள்ளது. ஆனால், முதலில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டை அவதானிப்போம்.

சமாதான உரையாடலிலும் அதன்முறிவுக்குப் பின்பும் சர்வதேச மட்டத்தில் நோர்வே நிலையான ஒரு சக்தியாக விளங்கியது. ஆனால், சுனாமிக்குப் பின்பு 56இற்கு மேற்பட்ட நாடுகள் இலங்கையின் அரசியலில் கவனம் செலுத்துகின்ற அரசுகளாக உள்ளன. குறிப்பாக பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புகின்ற வடிவத்தின் நேரடியான மனித உழைப்பையும், இயந்திர உழைப்பையும் வழங்கியதுடன், நிதி மற்றும் பொருள் உதவிகளைப் பாரியளவில் வழங்குகின்ற நிலை காணப்பட்டது. நோர்வேத் தரப்பு இலங்கையின் அரசியலில் விடுதலைப் புலிகளையும், சிறிலங்கா அரசையும் பொதுக்கட்டமைப்பின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுவருவதுடன், எரிக்சொல்ஹெய்ம் தமிழர் பிரதேசங்களில் அரசு முறைப்படியான பொருளாதார உதவிகளை மேற்கொள்ளவில்லை என்பதையும் வெளிப்படுத்தி வருகின்றார். இதனால் ஏற்பட்ட நெருக்கடி சர்வதேச சமூகத்திற்குப் புரிந்த விடயமாக இருப்பதோடு, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் அவ்விடயத்தை இலங்கை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் தமிழர்களுடன் (அதாவது விடுதலைப் புலிகளுடன்) இணைந்து மீள்கட்டமைப்பினை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசினைக் கோரியிருந்தனர்.

கொபி அனானின் வருகையை இலங்கை அரசு வடக்கு - கிழக்குக்குப் புறம்பானதாக்கியமை பலவீனமாகத் தென்பட்டாலும், ஐ.நா. செயலாளரின் வருகை இலங்கை அரசியலில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளதென்பதைக் காட்டுகின்றது. இலங்கையின் அரசியலில் சுனாமி மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியதென்பதனை சர்வதேச சமூகத்தின் வருகையை வைத்தே மதிக்கப்பட முடியும். அமெரிக்க முன்னாள் வெளிவிவகார செயலாளரின் வருகையை அடுத்து வருகைதந்த கொபி அனான், அமெரிக்க - இலங்கை உறவில் முக்கிய மாறுதலை ஏற்படுத்தியிருந்தார். அமெரிக்காவின் படைகளின் வருகை, அதனை முதன்மைப்படுத்திய பிராந்திய சக்தியின் அணுகுமுறைகள் எல்லாம் அமெரிக்க, இலங்கை அரசியலில் அதிக திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இதற்கான பின்னணியை விரிவாக அவதானிப்போம்.



அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கையின் அரசியலோ, பொருளாதாரமோ, இராணுவச் சமநிலை முரணாவதோ எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆனால், இலங்கையில் தனது செல்வாக்கும் பிடியும் நீடிக்கப்படவேண்டும் என்பதே அதன் அவாவாகும். இலங்கையில் தென்பகுதிகளிலும் சரி அல்லது வடக்கு - கிழக்குப் பகுதியிலும் சரி தனது இராணுவ நலன்களுக்கு இசைந்து கொடுக்கின்ற ஆட்சிமுறை நிலவுவதோடு, எதிர்காலச் சூழலைப் பொறுத்துத் தளம் ஒன்றை அமைக்கும் சூழல் காணப்பட்டால் போதுமானது. அதனால், இலங்கை பிரிவதையோ அல்லது சமஷ்டிக்குட்பட்ட தீர்வை ஏற்படுத்துவதையோ அல்லது இடைக்காலத் தன்னாட்சி அதிகார அமைப்பை ஏற்படுத்துவதை ஊக்குவிக்கவோ, தடைப்படுத்தவோ போகாது. மாறாக மேற்குறிப்பிட்ட எந்தத் தீர்வு வந்தாலும் அதில் தனது நலனை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சக்தி இருக்கிறதா? அதற்கான பொறிமுறை சரியாக அமைந்திருக்கிறதா என்றே அவதானிக்கும். அல்லது அத்தகைய பொறிமுறை இயந்திரத்தை உருவாக்கும் சூழலை நிர்ப்பந்தமாக ஏற்படுத்த விரும்பும். இதுவே அமெரிக்காவின் நிலைப்பாடு.

இனப்பிரச்சினைக்கான தீர்விலும் சரி சுனாமிக்கான மீள்கட்டமைப்பிலும் சரி அமெரிக்காவின் பங்கும் தலையீடும் இருந்தால் போதுமானது. சுனாமி நிவாரணப்பணிக்குழுவில் அமெரிக்க இராணுவத்தின் பங்கு தனித்துவமாகப் பேசப்பட்டது. அமெரிக்கப் படைகள் தமது வருகையை ஓர் அனுபவமாக ஆக்கிக் கொண்டதுடன், ஒத்திகையாகக்கூட இருக்கலாமென்ற கருத்து நிலவியது. எதுவாயினும், அது தென் இலங்கைக்கே உரியதென்பதை நாம் மறந்துவிட முடியாது. இதில், பிராந்திய சக்தியின் பங்கே சற்று நெருங்கக்கூடியதும், ஆழமாக ஆலோசிக்கப்படவேண்டியதுமான விடயமாகும்.

### பிராந்திய அரசியல்

சுனாமியின் தாக்கத்தை அனுபவித்த நாடுகளின் வரிசையில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியா எந்த நாட்டின உதவியையும் நாடாது தனித்து, தான் சாதித்ததுடன் (?), இலங்கைக்கு உடனடி உதவிகளை பாரியளவில் செய்யத் தயாரானதுடன், தனது கடற்படையையும் கப்பலையும் உடனடியாக அனுப்பத் திட்டமிட்டது. உண்மையில் இந்தியா சர்வதேச உதவிகளை நிராகரித்தமைக்கு இலங்கையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏனெனில், குஜராத் பூகம்பத்தின்போது உலக நாடுகளின் உதவியை இந்தியா பெற்றிருந்தது. சுனாமிக்கான உதவியை இலங்கை சர்வதேசத்திடம் பெறுவதில் தயக்கம் காட்டும் என்ற எதிர்பார்க்கையும் அதனால், இந்தியாவின் உதவியோடு நிறுத்திவிடும் என்று எதிர்பார்த்தது. ஆனால், இலங்கையின் எதிர்க்கட்சி, ஜனாதிபதி, ஆளும் தரப்பு என்ற வேறுபாடின்றிச் சர்வதேசத்திடம் உதவிபெறும் நிலை இந்தியாவுக்குச் சங்கடமான செய்தியாகவே அமைந்திருக்கும். ஏனெனில், இலங்கை விடயத்தில் ஓர் எல்லையை இந்தியா வரையறுக்க விரும்புகிறது. இனப்பிரச்சினையோ, சுனாமிக்கான மீள்கட்டமைப்போ தனது கட்டுப்பாட்டுக்கும் சக்திக்கும் உட்பட்டதாகவே அமையவேண்டுமென இந்தியா கருதுகிறது. ஆனால், அவையாவும் 1970 - 1980 களுடன் முடிந்துவிட்டன.

அமெரிக்கப் படைகளின் வருகை யதார்த்தமானதாக இருந்தாலும் அவற்றின் வெளியேற்றம் அதிருப்தியானதாகவே அமைந்திருந்தது. அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான செயலாளர் கருத்துத் தெரிவிக்கும்போது, இலங்கை அரசு இந்தியாவுடன் அதிகம் ஒத்துழைக்கின்றதெனக் குறிப்பிட்டதுடன் அதுவே அமெரிக்காவின் வெளியேற்றத்திற்குக் காரணம் எனக் கூறியிருந்தார். எனவே, இந்தியா - அமெரிக்கா விரிசல் என்பது இலங்கை விடயத்தில் நிரந்தரமானதொன்றாகவே அமைந்துள்ளது. இந்தியாவும் அமெரிக்காவும் சர்வதேச மட்டத்தில் நெருக்கமான சக்கதிகளாகவே காணப்படுகின்றன. இரண்டு அரசுகளும் பரஸ்பரம் தங்கியிருக்கின்றன. இந்தியா இராணுவ, பொருளாதார விடயத்திலும், தொழில்நுட்பத்திலும் அமெரிக்காவிடம் தங்கியிருப்பதுபோல் சந்தை மற்றும் வர்த்தகத்திற்காக அமெரிக்கா இந்தியாவிடம் தங்கியிருக்கின்றது. இது சர்வதேச மட்டத்தில் நிலவும் உறவாகும். ஆனால், தென் ஆசியாவுக்குள் அதிலும் இலங்கை விடயத்தில் இந்தியா, அமெரிக்காவின் எல்லைமீறிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவே விரும்புகிறது. இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீட்டை முற்றாக நிராகரிக்கும் இந்தியா, சுனாமி அழிவிலும் அதனையே ஏற்படுத்த விரும்பியது. இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள்ளும் எல்லைப்படுத்தலுக்குள்ளும் ஏற்படுத்த விரும்பும் தீர்வையே இலங்கை இனப்பிரச்சினையில் முன்வைக்க விரும்புகிறது. குறிப்பாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நிராகரித்த இந்தியா, மாகாணசபைக்கு உட்பட்ட அதிகாரத்தில் மிகக்குறை தீர்வைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறது. அதனையே சுனாமிக்குப் பின்பு காட்டியுள்ளது. இதனூடாக அமெரிக்க நலன்களையும் முறியடிக்க முடியுமென இந்தியா கருதுகிறது. அமெரிக்காவின் படைவிலகல் இந்தியாவையும் வெளியேற்றியது என்ற வகையில் வைத்துப் பார்த்தால், சுனாமி இயற்கை அழிவு என்பதைவிட படைநகர்வுக்கும் விலகலுக்குமான ஓர் அரசியல் களமாகவே உள்ளது.

(வளரும்)

## இறை சித்தத்துடனும், மன உறுதியுடனும் வாழ்க்கைப் பயணத்தை எதிர்கொள்வோம்

மனிதவாழ்வில் வேதனையும், துன்பமும், பயமும், திகிலும் தருவது சாவு. இயேசுவின் சாவு விசித்திரமானது, வித்தியாசமானது. அன்றைய சமூக - சமய - அரசியல் சூழலின் பின்னணியில் நடந்தேறிய ஒரு சதித்திட்டம். இயேசுவின் விடுதலை வேட்கையை முற்றாக முடக்கிவிட எடுக்கப்பட்ட முழுமுயற்சி.

மனிதர்களாகிய எமக்கு விடுதலையைத் தரமாறா வேட்கையுடன், தணியாத்தாகத்துடன் போராடியவருக்கு கொடுக்கப்பட்ட பரிசுதான் சிலுவைச்சாவு, ஏழையுடன் ஏழையாக, அடிமையுடன் நண்பனாக, துன்பப்பட்டவருடன் தோழனாக, பாதிக்கப்பட்டோருடன் பணியாளனாகத் தன்னை அர்ப்பணித்து நட்புடன் பிறர் நலனுக்காய் வாழ்ந்தவருக்கு, மாசற்ற செம்மறிக்கு மனிதன் கொடுத்தது சிலுவைச்சாவு.

மனித மீட்புக்காய், அவர்மேல் கொண்ட பாசத்தால் தன்னை முழு மன சுதந்திரத்துடன் கையளிக்கின்றார் (யோவா 10-18) தம்மையே வெறுமையாக்கி அடிமையின் கோலம்பூண்டு மனிதனாகி, சிலவைச்சாவை ஏற்கும் அளவிற்குத் தன்னைத்தாழ்த்தி சிலுவையில் தம் அன்பை நிரூபிக்கிறார் இயேசு. மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து அவர்களின் மீட்புக்காக, இழந்த உரிமைகளுக்காக, வாழ்வின் மகிழ்விற்காக சாவை அணைக்கின்றார் மாசற்ற தம் இரத்தத்தால், மாசற்ற எம்முகங்களைக் கழுவச் சித்தம் கொண்டார். இவ்வாறு கிறிஸ்து சாவதிலும் ஒருதிருப்பு முனையைக் காட்டினார். தம் சாவால் புதிய சரித்திரம் படைத்தார்.

யூதர்களுக்கு அவமானத்தின் சின்னமாகவும் கிரேக்கர்களுக்கு மடமையின் அடையாளமாகவும் இருந்த சிலுவை, யேசுவின் சாவால் மகிமைபெறுகின்றது. கிறிஸ்தவர்கள் வாழ்வில் முக்கியம் பெறுகின்றது. சிலுவை இன்றி வாழ்வு இல்லை என்ற விசுவாசம் நிலவுகின்றது. எம் நாளாந்த, தனிப்பட்ட, குடும்ப,

**அருட்சகோ.ச.யேசுதாசன் அ.ம.தி.**

சமூக சுமைகளை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, பிறர் புரிந்து கொள்ளாத உணர்வுகளைச் சுமந்து கொண்டு இயேசுவைப் பின் செல்லும்போது வாழ்வில் வெற்றியும், மாட்சியும், மகிமையும் மகிழ்ச்சியும், இறையாசியும், மன உறுதியும் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது இயேசுவின் சாவு. திடமுடனும், மன உறுதியுடனும், இறைசித்தத்துடனும் வாழ்க்கைச் சுமைகளைத் தாங்கி வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்திடக் கற்றுக்கொள்வோம்.

நட்பின் ஆழத்தை பிறரன்பின் தாகத்தை இறைவனின் சித்தத்தை இயேசுவின் வாழ்விலிருந்து கற்றுக்கொள்வோம். அதனை எம் வாழ்வாக்குவோம். பழைய வாழ்வை மாற்றி புதிய ஒளியை ஏற்றுவோம்.



இன்று பெரிய வெள்ளி

UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

The Chairman Tender Board University Of Jaffna will receive sealed tenders from contractors with at least five years experiences being registered with ICTAD in Grade - M5 or above for Civil Engineering/Buildings Construction works for interior Decoration work for the Auditorium at Faculty of Medicine, University of Jaffna Stage - I

Tender forms may be obtained from Deputy Registrar/ Administration University of Jaffna on producing valid registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's Counter, University of Jaffna until 21st April 2005.

☆ Non - Refundable deposit Rs. 3000/-

In addition an on demand security form any Bank acceptable to Vice-Chancellor University of Jaffna, to be submitted for Rs.200,000/- valid for minimum 120 days from the last date specified for accepting the tender.

Perfected tenders to be sent by registered post to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at Registrar's Office University of Jaffna on or before 27th April 2005 at 10.00 a.m

Tender forms may be inspected by the tenderers free of Charge at the Administration Branch of this University during office hours if necessary

**Vice - Chancellor,**
**University of Jaffna.**
23rd March 2005 (C/41693)(21)

**P.O.Box - 57**
**Thirunelvely,**
**Jaffna.**



**VACANCIES**

**Ticketing Staff (2)**
**(Female)**

**Candidate's Profile**

- Be within 20-30 years of age
- Good command of the English language
- Be Smart and Energetic
- Computer Literate
- Be of a pleasing disposition and Customer orientated.

Please call over for walk in interviews with testiomonials & biodata on *Saturday 26th March 2005 between 08.30 a.m& 2 p.m*

MANOJ EXPRESS

**Manoj Express**
**AERO LANKA**
32, Clock Tower Road,
(Near Police Station)
Jaffna,

(C/41641)(21


## வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வடமராட்சி கிழக்கில் அமைக் கப்பட்ட குடியிருப்புக்களைக் கையளிக்கும் நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினாலும், 'வேல்ட் விஷன்', 'கெயர்' ஆகிய நிறுவனங்களினாலும் இரண்டு குடியிருப்புகளில் அமைக்கப்பட்ட 155 வீடுகளே அன்று பாதிக்கப்பட்டோரிடம் கைய ளிக்கப்பட்டன. அன்றையதினம் காலையில் 10ஆம் வட்டாரம், உடுத்துறையில் அமைகக்கப் பட்ட 95 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கிராம அலுவலர் தவராசா தலைமையில் நடை பெற்றது. பொதுச்சுடரை வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமா சப் பொறுப்பாளர் நடராசா, சுனாமி வேலைத் திட்ட மக்கள் குழுவின் தலைவர் க.தனபாலசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கெயர் நிறுவனத் தின் பிரதிநிதி அரியமலர், தமிழர் புனர்வாழ் வுக்கழகப் பிரதிநிதி யூட் ஆகியோர் வீடுகளைப பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கையளித்தனர்.

தொடர்ந்து உடுத்துறை 10 ஆம் வட்டாரம், கொக்கிளாய் வீதியில் அமைக்கப்பட்டுள்ள 60 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது. பொதுச்சுடரை க கடற்புலிகளின் கட்டளை அதிகாரி செஞ்சேரன், செயலணிக்குழுவைச் சேர்ந்த சுடர்மணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து 'வேல்ட் விஷன்' நிறுவனப் பிரதிநிதி வீடுகளைக் கையளித்தார். (8)

## ஒப்பனை நிலையங்களுக்கு நேரக் கட்டுப்பாடு தளர்வு

உயிர்த்த ஞாயிறு திருநாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனை நிலையங்கள் அனைத்தும் நேற்று முதல் நாளை சனிக்கிழமை வரை நேரக்கட்டுப்பாடின்றி இயங்கமுடியுமென்று யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் ஒன்றியம அறிவித்துள்ளது. (ஒ-202)

## இசை நிகழ்வுகள்

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட் டில் அடுத்த மாதம் 14ஆம் திகதி இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று நடைபெறுவதாக அறிவிக் கப்பட்டுத் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற் போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-202)

☆ ☆ ☆

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகமும் கோண்டாவில் இளைஞர் முன்னேற்றக்கழகமும இணைந்து மே மாதம் 23ஆம் திகதி பிற்பகல 2 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இன்னிசை நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன.

இந்நிகழ்வு இன்று நடைபெறுவதற்கு ஏற் பாடாகியிருந்து தவிர்க்க முடியாத காரணத்தால பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஒ-202)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**கேள்வி அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்த மருத்து வத்துறையில் அமைந்துள்ள கல்விசார் கட்டடங்கள் புனர மைப்பு கட்டடம் II வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கான 'இக்ராட்' (ICTAD) நிறுவனத்தின் தரம் 8 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் பிரதிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து 20.04.2005 வரை ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைகக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடு களுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1) மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ 20,000.00
2) மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூ 500.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப் பட்டு வேலையின் பெயரை உறையின் (என்வலப்) இடது மூலையில் குறிப்பிட்டு *தலைவர் கேள்விச்சபை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களிற்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது பல்க லைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 25.04.2005 அன்று பிற்பகல் 3.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடி யாக அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும். கேள்வி தாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்கள் திறக்கும்பொழுது பிரசன்னமாயிக்க முடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

**துணை வேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**தபால்பெட்டி இலக்கம் 57**
**திருநெல்வேலி யாழ்ப்பாணம்.** (சி-41694)(21-11-45)


# வாழ்வகம்: நிரஞ்சனா நினைவு மண்டப திறப்பு விழா, நூல் வெளியீடு ஞாபகமாக...



அன்று ஒரு விடுமுறை நாள். மதிய உணவு நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக நானும் என் மனைவியும் அந்த வீட்டுக்குச் சென்றிருந்தோம். அங்கே தான் தற்செயலாய் அந்தப் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தது.

எட்டு வயதே நிரம்பிய அந்தப் பிஞ்சின் கண்பார் வையை இறைவன் ஏனோ ஏறத்தாழ முற்றாகவே பறித்து விட்டிருந்தான். மிகவும் சொற்பமான கண் பார்வையோடு மகிழ்ச்சியாய்த் துள்ளிக் குதித்துக் கொண்டிருந் தது அந்தப் பிஞ்சு. "ஓ. இன்னும் காலம்" கடந்துவிடவில்லை. நிச்சய மாக இந்தப் பிள்ளைக்குக் கல்வி வாய்ப்பினை வழங்கவேண்டும். அதன் மூலமாக இவளின் எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும். இந்தச் சிறுமியின் கண்கள் செயற்படாவிட்டா லென்ன? கல்வி எனும் கண்ணை இவளுக்குக் கொடுத்தால் அது போதுமே?...." என் மனம் அடித்துக் கொண்டது. அந்தப் பிள்ளையின் தாயை அணுகினேன்.

ஓரிரு நிமிட சம்பிரதாயபூர்வ உரையாடலைத் தொடர்ந்து மெதுவாய் விடயத்தை ஆரம்பித்தேன். "அம்மா. உங்கடை பிள்ளை பள்ளிக்கூடத்துக்குப் போறவவோ?" உடனடியாகவே பதில் "இல்லை" என்று வந்தது. நான் தொடர்ந்தேன். "சுன்னாகத்திலை வாழ்வகம் எண்ட ஒரு நிறுவனமிருக்குது. அங்கை பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள் தங்கியிருந்து படிக்கினம். அங்கையிருந்து படிச்ச பலபேர் இண்டைக்குச் சுயமாய், சந்தோசமாய் வாழ்ந்து கொண்டிருக் கினம். நீங்களும் உங்கடை பிள்ளையை அங்கை சேத்தால் நிச்சயமாய் இவவும் நல்ல ஒரு நிலைமைக்கு வருவா....."

"அப்பிடியெண்டால் நீங்கள் பிள்ளையைக் கொஸ்ரலிலை விடச் சொல்லிறீங்களோ?" அந்தத் தாய் என்னை இடைமறித்தாள். நான் 'ஆம்' என்று தலையசைத்தேன்.

"எங்களுக்கு இவ ஒரேயொரு பொம்பிளைப்பிள்ளை. இது வரைக்கும் நாங்கள் இவவை ஒரு நாளும் பிரிஞ்சதில்லை. இவ வின்ரை அப்பா பிள்ளையைக் கொஸ்ரலிலை விட ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். அவருக்குப் பிள்ளையிலை சரியான பாசம்...."

நான் அந்தத் தாயை இடைமறித்தேன்.

"அம்மா, எனக்கு உங்கடை நிலைமை நல்லாய் விளங்குது. ஆனாலும், நான் சொல்லிறதைக் கொஞ்சம் கேளுங்கோ.

பொதுவாகப் பார்க்கின்றபோது எமது பிரதேசத்திலுள்ள பார் வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் கல்வி நிலை மிகவும் மோச மாகவே உள்ளது. கல்வி வாய்ப்புப் பெறமுடியாத இருண்ட சூழலில் இன்றும் எம் மத்தியில் பல பிள்ளைகள் வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். இதற்கு முக்கியமான காரணம் இவர்களது பெற்றோரின் அறியாமையேயாகும். பல பெற்றோர்கள், தமது பிள்ளைகளாலும் நன்றாகக் கல்வி கற்க முடியும்; வாழ்க்கையிலே முன்னுக்கு வர முடியும் என்பதை உணராதவர்களாக - அறியாதவர்களாக - இருக்கிறார்கள்.

## நிம்மதியாய்த் தூங்கு!

இன்னும் பல பெற்றோர்கள் பிள்ளை மீது கொண்ட அதீத பாசம் காரண மாகத் தங்கள் பிள்ளை எப்போதும் தங்களுடனேயே பத்திரமாய் இருக்க வேண்டும் எனும் எண்ணத்தில் பிள்ளையை வீட்டுக்குள்ளேயே வைத் திருக்கின்றார்கள்.

இந்தப்பிள்ளை விடயத்திலும் நிறைய முயற்சி தேவை என்பது எனக்குத் தெரிந்தே இருந்தது. உறவினர் ஒருவரின் உதவியோட அந்தப் பிள்ளையின் தாய், தந்தையைத் தொடர்பு கொள்ள முயன்றேன். அந்த முயற்சி வீண்போகவில்லை.

ஒருநாள் அவர்கள் இருவரும் வந்து என்னைச் சந்தித்தார்கள். அமைதியாய், ஆறுதலாய் அவர்களோடு நிறையக் கதைத்தேன். எப்படி யாவது உங்கள் பிள்ளைக்குப் படிப்பதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள். உங்கள் மகளுக்கு நீங்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய உதவி இதுவாகத் தான் இருக்க முடியும் என்று எடுத்துக் கூறினேன். அவர்களது மனதிலே கலக்கமிருந்தாலும் அவர்கள் என் பேச்சை ஏற்றுக் கொண்டார்கள். "மிக விரைவிலேயே பிள்ளையை வாழ்வகத்தில் சேர்க்கின்றோம்" என்று கூறி என்னிடமிருந்து விடைபெற்றார்கள். பெரிதாய் எதையோ சாதித்துவிட்ட நிறைவோடு நானும்அவர்களுக்கு விடைகொடுத்தேன்.

அடுத்து வந்த ஓரிரு நாள்களிலேயே அந்தச் சிறுமி வாழ்வகத் திலுள்ள எல்லோர் மனங்களையும் வென்றுவிட்டாள். அவளது துடுக்குத் தனத்தையும் இடைவிடாத பேச்சையும் யாரால் தான் மறக்க முடியும்? யாரைக் கண்டாலும் முதலில் "குட்மோணிங்" சொல்வது அவளாகத் தான் இருக்கும். யாருக்காவது பிறந்தநாள் வந்தால் முதலில் வாழ்த்துச் சொல்வதும் அவளாகத் தான் இருக்கும்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே ஒரு மாணவியாய் அவளைச் சேர்த்தபோது அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதைவிடப் பெரிய மகிழ்ச்சி அவளின் பெற்றோருக்கு. "எங்கள் பிள்ளை யும் இராமநாதன் கல்லூரியில் படிக்கிறாள்" என்று எண்ணி அவர்கள் இருவருமே மகிழ்ந்து போனார்கள். "எங்கோ இருந்த இந்தப் பிள்ளையை இராமநாதன் கல்லூரி வரை கொண்டு வர முடிந்ததே என எண்ணிய போது என் மனமும் திருப்தியால் நிறைந்துபோனது."

காலச் சக்கரத்தின் வேகச் சுழற்சியில் அந்த நாளும் வந்தது. அன்று வாழ்வகத்தில் ஒளி விழா. ஆடல், பாடல் என்று எல்லா நிகழச்சியிலும் அவள் பங்கெடுத்துக் கொண்டாள். அன்று எல்லோர் மனங்களிலும் மகிழ்ச்சி.

(சி-41672) (21-11-45-39)



சிறுமி நிரஞ்சனா

ஒருவாறாய் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன. மகிழ்ச்சியாய் மதிய உணவு அருந்தி விட்டு, பிள்ளைகள் எல்லோரும் தத் தமது பெற்றோரோடு வீடு செல்ல ஆயத்தமானார்கள். அந்தச் சிறுமியும் வீடு செல் வதற்காகத் தன் வழக்க மான குதூகலத்துடன் எங் கள் எல்லோரிடமும் வந்து விடைபெற்றுக் கொண் டாள். அதுதான் நாங்கள் அந்தப் பிஞ்சுக்குக் கொடுக் கின்ற கடைசி விடை என்று தெரியாமலே எல்லோரும் மகிழ்ச்சியாய் விடை கொடுத்து வழியனுப்பினோம்.

சில நாள்களின் பின் சுனாமி என்ற அந்தச் சோக நாடகம் சடுதியாய் அரங்கேறி முடிந்தது. வீடு சென்ற எங்கள் பிள்ளைகளின் நிலை பற்றி அறிய நாம் பரபரப்பாய் முயன்றோம்.

அப்போதுதான் அந்தச் செய்தி பேரிடியாய் வந்து எம்மைத் தாக்கியது. அந்த அசுரத் தாக்குதலில் நாமெல்லாம் ஆடித்தான் போனோம். எங்கள் நிறஞ்சனாவை, எங்கள் இதயங்களிலெல்லாம் நிறைந்துவிட்ட அந்த பிஞ்சை சுனாமி எம்மிடமிருந்து பறித்துச் சென்றுவிட்டதா? எங்களால் நம்பவே முடியவில்லை. அந்த ஓயாத பேச்சும் சிரிப்பும் இனி எங்கள் வாழ்வகத்தில் கேட்காது என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஓ நிரஞ்சனா, எங்கடை குஞ்சு, நீ வெறும் நிரஞ்சனாவாய் சாகேல்லை. எங்கையோ ஒரு மூலையிலிருந்த ஒரு கண் தெரியாத பிள்ளையாய்ச் சாகேல்லை. எங்கள் வாழ்வகத்தின் மதிப்பு மிக்க ஒரு பிள்ளையாய்த்தான் நீ இந்த மண்ணை விட்டுப் போயிருக்கிறாய். புகழ்பூத்த இராமநாதன் கல்லூரியின் பெருமை மிக்க ஒரு மாணவியாய்த்தான் இந்தப் பூமியை விட்டுப் போயிருக்கிறாய். நாங்கள் உள்ளவரை, எங்கள் வாழ்வகம் உள்ளவரை, இராம நாதன் கல்லூரி உள்ளவரை நிச்சயமாய் உன் பெயரும் நிலைக்கும். நீ நிம்மதியாய்த் தூங்கு; நிம்மதியாயத் தூங்கு.

**ஆ.ரவீந்திரன்,**
**உபதலைவர்,**
**வாழ்வகம்.**

**சுனாமி அலையால் அள்ளிச்செல்லப்பட்ட வாழ்வகக் குழந்தை யும் இராமநாதன் கல்லூரி மாணவியுமான அமரர் நிரஞ்சனா திருப்பதிநாதன் அவர்களின் 90ஆவது நினைவு நாள் இன்று.**


மங்களகரமான திறப்பு விழா
இன்று (25.03.2005)
வெள்ளிக்கிழமை மிகவும்
கோலாகலமாக
ஆரம்பமாகிறது !
வீட்டுக்குத்
தேவையான
மின் இணைப்புப் பொருள்கள்
KTK PVC PIPES
மின்சாதனங்கள், தண்ணீர்க் குழாய்கள் மற்றும்
பொருத்திகள் ஆகியனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதியதோர் உதயம்!
KTK PVC PIPES
KTK PVC PIPES
MAHESHSONS
279, Stanley Road, Jaffna. T.P. 021 222 7657
(ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகில்)
Sold Distributors
KTK
PVC
KAMAL PVC INDUSTRIES (PVT) LTD
Manufacturers of PVC Pipes Electrical Conduit Pipes
Fittings & Solvent Cement
(C/41667)(52)

## பகிரங்க ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள 40 ஸ்ரீ XXXX இலக்க பாரவூர்தி 30.03.2005 முற்பகல 11.00 மணிக்கு கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க பாரவூர்தி தரிப பிடத்தில் (பரந்தன் சந்தியில்) வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா1000/- செலுத்தி கேள்வியில் பங்குகொள்ளலாம். பாரவூர்தியை 30.03.2005 காலை 10.00 மணிவரை பார்வையிடலாம்.

ஏலத்தில தெரிவுசெய்யப்படுபவர் மூன்று நாள்களுக்குள் முழுப்பணததை யும் செலுத்தி பாரவூர்தியைப் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி. - முகாமையாளர்.

(சி.41688)(42-14)

## கிளாலிப் பாடசாலை அல்லிப்பளையில்

தென்மராட்சி,மார்ச்25

பளை அரசர்கேணியில் இயங்கிவரும் கிளால றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாட சாலை விரைவில் அல்லிப்பளையில் இயங்க வுள்ளது.

பளை அறத்தி நகரில் இப்பாடசாலைக்கான வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

கிளாலிப்பகுதி மக்கள் தமது சொந்த இருப் பிடங்களில் குடியமரமுடியாத நிலை உள்ளது. அவர்கள் தற்போது அல்லிப்பளை அறத்தி நகர் பகுதியில் குடியமர்த்தபபட்டு வருகின்றனர். இதனால், அப்பகுதி யில் பாடசாலை அமைக்கப்பட்டு வரு வதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-117)

## மகளிர் தினவிழா

அரியாலை,மார்ச்25

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச சபையின் மாவட்ட மகளிா குழு நடத்தும அனைத்துல கப் பெணகள் தின விழா நாளை சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கூட்டுறவா ளர் வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறும்.

கூட்டுறவுச் சபை யின் மாவட்ட மகளிர் குழுத்தலைவி திரு மதி ரதி சோதிலிங் கம் தலைமையில் நடைபெறும் இவ்விழா விற்கு யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வ நாயகம் பிரதமவிருந் தினராகக் கலந்து கொள்வார்.

விழாவில் கூட்டு றவு மகளிர் மலர் வெளியீடு மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். (ஒ-17)

## Sarvodaya Economic Enterprise Development Services (Guarantee) Ltd.

**Striving Forward in Business Development Services**

**We are looking for a competent, dynamic, self motivated & results oriented person for a 2 years contract for the Business Development Centre in Jaffna under a Donor funded initiative to support the Business Service Support Facility (BSSF).**

**Business Marketing Advisor – Northern Region**

**Qualifications & Experience:**

* Should be a Graduate and/or Person with appropriate professional qualifications.
* Should possess at least 5 years work experience in SME sector development.
* Should possess a good knowledge of English & Tamil (both oral and written)
* Possess computer Literacy with e-mail and internet skills.
&
* Wide experience in product marketing, market analysis, market development, international marketing and market testing Technical skills in market research. Import /Export, preferably, with experience in working with trade Associations and Chambers of Commerce & Industry.

**Salary: Negotiable**

Interested candidates should forward their CVs with in 10 days to gether with names and addresses of two non-related referees (one should be work related) to:

CEO/Managing Director
Sarvodaya Economic Enterprise Development Services (Guarantee) Ltd.
"Arthadharma Kendraya", No.45, Rawatawatta Road, Moratuwa
e-mail ceoseeds@seeds.lk

(43447)(50)

## 90ஆம் நாள் நினைவலைகள்



### நல்லையா பிரகலாதன்

[கண்ணன்]

மாயவன் படைப்பு 03–10–1978 சுனாமியின் அழிப்பு 26–12–2004

ஆசைமகனே! அன்பான கண்மணியே!
நேசத்துரையே நெடும்பயணம் போனாயோ?
அன்னையிலே தரித்து மண்ணிலே
அவதரித்து தூளியிலே விளையாடி
ஆழியினால் விழிமூடிய கண்ணாவே!
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

தாவடி வடக்கு, கொக்குவில். (43492)(42-14)

தாய், சகோதரிகள்:

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா அவர்களினதும் மாணிக்கம் சுப்பிரமணியம அவர்களினதும் அன்புச் சகோதரனான

### மாணிக்கம் சிவபாததுரை

அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு எமது பாடசாலை சமூகம் துயரமடைந்துள்ளது. அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை. (43475)(42-14)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கோபுரம் சவுண்ட்ஸ் ஒலிபெருக்கிச் சாதனங்கள்

எம்மிடம் சகல விதமான **AHUJA** ஒலிபெருக்கிச் சாதனங்களையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

1. அம்பிளிபயர் வகைகள்
2. மைக் வகைகள்
3. யூனிற் வகைகள்
4. லைன் ரான்ஸ் போமர்கள்
5. ஸ்ரான்ட் வகைகள் (சிறியது, பெரியது)
6. AMX 912 9, சனல் மிக்சர்கள்
7. மைக் வயர் No.1
8. டயபிறம்
9. கோண்கள் 18", 22", 24", "GS"

**KOPURAM SOUNDS AHUJA**

கோபுரம் சவுண்ட்ஸ்,
38,மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (43448)(42-14)

## நிலவு.com இன் தமிழ் கணினி 2005

## கண்காட்சியும் கருத்தரங்கும்

காலம்: ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை
காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை
இடம்: யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

தமிழ் கணினி · தமிழ் மென்பொருள்கள் · தமிழ் மூலம் கணினிக்கல்வி · கணினி மூலம் பாடசாலைக்கல்வி · இணையம் · மின்னஞ்சல் · கணினி வன்பொருள் · கணினி வலையமைப்பு · மென்பொருள் பயன்பாடு · பல்லூடக வடிவமைப்பு · கணினி மின்னிதழ் · கணினி ஜோதிடம் · கணினி நூல்கள் · சிறுவர்களுக்கான கதைகள் பாட்டுக்கள் · இன்னும் பல பல ..........

**கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள்**

MS Word · MS Excel · MS PowerPoint · MS Access · Internet &e m@il · PageMaker · PhotoShop · CorelDraw · PhotoDraw · Advance PhotoShop · Computer Hardware · MS FrontPage · DreamWeaver · 3D Studio MAX · ASP · JSP · Flash · Visual Basic · JAVA · Windows Basics · Oracel · MAYA · HTML · Software · Collections · Thamizha · Thirukkural

**கம்ப்யூட்டர் டுடே** பழைய புதிய புத்தகங்கள் அனைத்தும் விஷேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**275, Jaffna Road, Manipay. 0777 740413**

ஊடக அனுசரணை: உதயன்

(சி.41689)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை யோகேஸ்வரநாதன்

(செயலாளர், நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகேஸ் வரநாதன் அவர்கள் 23-03.2005 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சற்குணலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை - தவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் கோப்பாய் மத்தியைச் சோந்த நவரத்தினம் மற்றும் காலஞ்சென்ற மங் கையர்க்கரசி தம்பதிகளின் மருமகனும் மற்றும் கௌசி, கிரிஷாந் (Excutive Accountant), தர்சிகா, சுமித்தா (கணனி ஆசிரியை), யசிந்தா (தர்காநகர் கல்வியியற் கல்லூரி மாணவி) ஆகி யோரின் அன்புத் தந்தையும் கருணாநிதியின் மாமனாரும் மற்றும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரனின் (எழுதுவினைஞர், மக்கள்வங்கி) அன்புச் சகோதரனும் சத்தியராணி, சுவர்ணலீலா (லண்டன்), கஜமுக வரதன் (லண்டன்), இந்திரலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் வாகீசன், சுரேஸ்காந்த், ரஜீவ்காந்த், லோஜிதா ஆகியோரின் பெரியப்பா வும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.03.2005) வியாழக் கிழமை பி.ப. 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத் தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*V.T.S. வீதி,*
*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (சி-43472)(24-14-42)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி அம்பலவாணர்



சுழிபுரத்தினைப் பிறப்பிடமாகவும் இணுவில் காரைக்கால் சிவன்கோயிலடியை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அம்பலவா ணர் 22-03-2005 செவ்வாய்க்கிழமை காலமானா.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சுவாமி யாரின (காரைக்கால் மணியத்தார்) அன்பு மனை வியும் கைலாயநாதன், ஜெகநாதன், காலஞ்சென றவர்களான இராசலக்ஷ்மி, சாந்தகுணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி (ரதி), ஸ்ரீரஞ்சினிதேவி (ராணி), கதிர்காமலிங்கம் (கண்ணன்), தாட் சாயினி (ஆனந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேந் திரன் (T.O.நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), சரவண பவன் (லண்டன்), மீனலோஜினி (சுவிஸ்), அருள்நேசன் (S.D.O. பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவவைஷ்ணவி (லண்டன்), தர்ஷிகா (கல்வியியற்கல்லூரி - கோப பாய்), வித்யா (லண்டன்), மோகனப்ரியன் (யா/கோண்டாவில் இந்து மகாவிததியாலயம்), பிருதுவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-03-2005) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீரங்கம்", கே.கே.எஸ்.வீதி,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.* (43473)(26-14-42)

தகவல்:
சோ.லோகேந்திரன்,
தி.அருள்நேசன்.

# இந்தியாவுடனான பேச்சுக் குறித்து பாகிஸ்தான் அதிபர் எச்சரிக்கை

இஸ்லாமாபாத்,மார்ச்25

காஷ்மீர் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், இந்தியா - பாகிஸ்தான் இடையே நடக்கும் பேச்சு தடம்புரளும் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் எச்சரித்தார்.

பாகிஸ்தான் தேசிய தினத்தை முன்னிட்டு, இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் பிரமாண்ட இராணுவப் பேரணி நடந்தது. இதில், அதிபர் முஷாரப் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

நம் மீது திணிக்கப்படும் எந்த வகையான நிர்ப்பந்தத்தையும் ஏற்கமுடியாது. காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவும், பாகிஸ்தானும் வளைந்து கொடுத்தும், தைரியத்துடனும், சிரத்தையுடனும் செயற்படவேண்டும். இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த மூன்று போர்களில் இரண்டு காஷ்மீருக்காக நடந்தது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் காஷ்மீர் மக்களுக்கு ஏற்புடைய வகையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். காஷ்மீர் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், இரு நாடுகளுக்கும் இடையே தற்போது நடக்கும் பேச்சு தடம்புரளும். ஸ்ரீநகர் - முசாபராபாத் இடையே பஸ் விடுவது, காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வாகாது. அது, இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றுதான்.

- இவ்வாறு முஷாரப் பேசினார். விழாவில் சிறப்பு விருந்தினராக ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் கர்சாய் கலந்து கொண்டார்.(ஒ)



பாகிஸ்தானின் தேசிய தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இராணுவ அணிவகுப்பு இடம்பெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் ஹர்சாய் மற்றும் பாக். அதிபர் ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கின்றனர்.

## பாப்பரசர் நேரில் ஆசி



உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கான் நகர புனித பேதுருவானவர் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூடிய மக்களுக்கு நேரில் தோன்றி ஆசி வழங்கினார்.

பாப்பரசர் ஆசி வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டு, சுமார் 15 நிமிடங்கள் கழித்தே அவர் ஆலய மாடிக்கு வந்தார். பின்னர் ஒரு நிமிட நேரம் காட்சியளித்த பாப்பரசர் சில தடவைகள் கைகளை உயர்த்தி ஆசி வழங்கினார்.

பாப்பரசருக்கு அளிக்கப்படும் சிகிச்சை பயனளிக்கவில்லை என்று செய்திகள் வெளியான நிலையில், அவரைக் காண ஏராளமானவர்கள் கூடிநின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## நீதிமன்றில் சங்கராச்சாரியார்கள்

தமிழகத்தின் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜயேந்திரர் மற்றும் விஜயேந்திரர் உள்ளிட்ட 24 பேரும் காஞ்சி நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்கள்.

எனினும், குற்றஞ்சாட்டப்பட்டீவர்களுக்கு குற்றப்பத்திரிகையின் நகல்கள் வழங்கப்படவில்லை. இதையடுத்து இவ்வழக்கை மார்ச் 31இற்கு ஒத்திவைப்பதாக நீதிவான் உத்தமராஜ் அறிவித்தார்.

சங்கரராமன் கொலைவழக்கில் ஜயேந்திரர், விஜயேந்திரர் உட்பட 5 எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 19 எதிரிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 24 எதிரிகள் உட்பட பலருக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட வேண்டியுள்ளது. குற்றப்பத்திரிகை நகல்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்கங்களை செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தயாரித்து வந்தனர். இந்தப் பணி இன்னும் நிறைவடையவில்லையாதலால் குற்றப் பத்திரிகையின் நகல்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ஒ)

# சேது சமுத்திரத் திட்டத்தால் சுனாமி ஆபத்து ஏதுமில்லை

## இந்திய நிபுணர் குழு அறிக்கை

சென்னை,மார்ச்25

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாகக் கடலோர மாவட்ட மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று இந்திய நிபுணர் குழு அறிக்கை அளித்துள்ளது. இத்திட்டம் குறித்து, தமிழக அரசு சமர்ப்பித்த 5ஆயிரம் பக்க மக்கள் கருத்தறியும் ஆவணங்களை முழுமையாகப் பரிசீலித்த நிபுணர் குழு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மீன்பிடித்தொழில் பாதிக்கப்படும் என்றும், பெரும்பாலான மக்கள் கட்டாயமாக வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்றும், கடலோரப் பகுதிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அவற்றை ஆராய்ந்த நிபுணர் குழு, அவை அனைத்தும் தவறான பிரசாரங்கள் எனக் கருதியது. மீன்பிடித் தொழில் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்றும், கால்வாய் பகுதிகளில் கூட மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளது.

பொதுமக்கள் பலர் சேதுசமுத்திரத் திட்டத்தால் சுனாமி ஆபத்து பலமடங்கு அதிகரிக்கும் என்றும், சுனாமி ஏற்பட்டால் இழப்பு மிகக கடுமையாக இருக்கும் என்றும் அச்சம் தெரிவிததுள்ளனர்.

ஆனால், மாதிரி ஆய்வுகளை ஆய்வு செய்த அக்குழு, சுனாமிப் பேரலை மன்னார் வளைகுடாப் பகுதியைத் தாக்கும் வாய்ப்பு இல்லை என்றும் - இத்திட்டத்தால் சுனாமி ஆபத்து ஏதும் இல்லை என்றும் கூறியுள்ளதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## உலக அரங்கில்

# பெண் தலைமையில் தொழுகை எகிப்து முஸ்லிம் தலைவர் எதிர்ப்பு

அமெரிக்காவில் பெண் தலைமையில் தொழுகைக் கூட்டம் நடந்து வருவதற்கு எகிப்திய முஸ்லிம் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மான்ஹட்டன் பகுதியில் ஆண்களும் பெண்களும் கலந்துகொள்ளும் தொழுகைக் கூட்டத்துக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் அமீனா வாதுத் என்ற பெண்மணி தலைமை தாங்கி நடத்தி வருகிறார். ஒரு பெண் தலைமையில் இந்தத் தொழுகைக் கூட்டத்தை நடத்த அங்குள்ள மூன்று மசூதிகள் இடந்தர மறுத்துவிட்டன. இதையடுத்து அமீனா வாதுத், செயின்ட்ஜோன் தேவாலயத்தில் முஸ்லிம் களின் கூட்டுத் தொழுகையை நடத்திவருகிறார்.

இந்தத் தகவல் எகிப்திய பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்து எகிப்து நாட்டின் முஸ்லிம் மதத் தலைவர் அலி கோமா குறிப்பிடுகையில் இஸ்லாமிய விதிகளுக்குப் புறம்பாக அமீனா வாதுத் இக்கூட்டத்தை நடத்தி வருவதை ஏற்கமுடியாது. தொழுகைக்கு வரும் பெண்கள் பின்புற வாசல் வழியாகவோ அல்லது பக்கவாட்டில் உள்ள வாசல் வழியாகவோ பிரார்த்தனைக் கூட்டத்துக்குள் நுழைய வேண்டும். ஆண்களுக்குப் பின்னால் தான் அமர்ந்து தொழுகை நடத்த வேண்டும். ஆனால், அமீனா நடத்தும் தொழுகைக் கூட்டத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து அமர்ந்துள்ளனர். இதை ஒருபோதும் ஏற்கமுடியாது. பிரார்த்தனைக் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த இஸ்லாமிய விதிப்படி பெண்களுக்கு உரிமையும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார். (ஒ)

# அமெ. சட்டமா அதிபர் மீது புதிய குற்றச்சாட்டு

லண்டன்,மார்ச்25

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததை அங்கீகரித்த விடயம் தொடர்பாக அமெரிக்க சட்டமா அதிபர் கோல்ட்ஸ்மித் பிரபு புதிய குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறைச் சட்டத்தரணி எலிசபெத் வில்ம்ஸ்ரஸ்ட் அம்மையாரின் பதவி விலகல் கடிதத்தின் ஒரு பகுதியைத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்டது.

2003ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் திகதிவரை ஈராக் மீது அமெரிக்கா போர்தொடுப்பது ஐ.நா. விதிகளுக்கு முரணானது என்ற கருத்தையே சட்டமா அதிபர் கொண்டிருந்தார் என்றும் -

ஆனால், மார்ச் 17ஆம் திகதி அவர் வெளியிட்ட அறிக்கையில் ஐ.நா. விதிகள் கவனத்தில் கொள்ளத்தேவையில்லாதவை என்று அவர் குறிப்பிட்டிருந்தார் என்றும் -

எலிசபெத் அம்மையார் தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதன் அடிப்படையில் அரசியல் வற்புறுத்தல் காரணமாக ஈராக் மீதான படையெடுப்பை அங்கீகரித்தார் என்ற குற்றச்சாட்டை அமெரிக்க சட்டமா அதிபர் எதிர்கொண்டுள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பது சட்டபூர்வமானதல்ல என்று கூறி, வெளியுறவுத்துறைச் சட்ட ஆலோசகர் பதவியிலிருந்து எலிசபெத் அம்மையார் போர் தொடங்கிய போது விலகியிருந்தார்.

அப்போது, அவர் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதத்தைத் தற்போது தகவல் அளிக்கும் சுதந்திரம் என்ற அடிப்படையில் தொலைக்காட்சி நிறுவனமொன்று பெற்று வெளியிட்டுள்ளது. (ஒ)

# அமெ. தீவிபத்து; 14பேர் பலி!

வாஷிங்ரன்,மார்ச்25

அமெரிக்காவின் டெக்ஸாஸ் நகரில் உள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 14 பேர் உடல கருகி இறந்தனர். மேலும் 100 பேர் வரை படுகாயமடைந்தனர்.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்கனவே பாதுகாப்புக்குறைபாடு காரணமாக தீவிபத்துக்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால் தற்போதைய சம்பவத்துக்கு தீவிரவாத நடவடிக்கை காரணமாக இருக்கலாம் என்ற நோக்கில் தீவிர விசாரணை நடத்தப்படுவதாக மேற்படி நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மூன்றாவது பெரிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையமான இது அமெரிக்காவின் பெற்றோலிய உற்பத்தியில் 3 சதவீதத்தை நிறைவு செய்கின்றது. (ஒ)

# செலவு மிகுந்த நகரங்கள்

பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு என்ற அமைப்பு உலகம் முழுவதும் உள்ள பெரிய நகரங்களில் ஆகும் செலவு விவரங்களைக் கணக்கிட்டு ஆண்டுக்கு இருமுறை செலவு மிகுந்த நகரங்களின் பட்டியலை வெளியிடுகின்றது. இந்தக் கணக்கெடுப்பில் உலகின் செலவு மிக்க நகரமாக ஜப்பான் தலைநகரான டோக்கியோ இடம்பிடித்துள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் ஒசாகா மற்றும் கோபே நகரங்கள் வருகின்றன. லண்டன் 7 ஆவது இடத்தில் வருகிறது. ஹொங்கொங் 12 ஆவது இடத்திலும் சிங்கப்பூர் 19 ஆவது இடத்திலும் சியோல் மற்றும் சிட்னி 25ஆவது இடத்திலும் வருகின்றன. நியூயோர்க் 23 ஆவது செலவுமிக்க நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. டெகரான 32 ஆவது இடத்தில் வருகிறது.

இப்பட்டியலில் டில்லியும், கராச்சியும் 120 ஆவது இடத்தில் வருகின்றன. மும்பை 122 ஆவது இடத்தில் வருகிறது. மணிலா 123ஆவது இடத்தில் வருகிறது. மொத்தம் 130 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருள்களின் விலைவாசி மற்றும் பண மதிப்பு ஆகியவற்றை கணக்கிட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப் பட்டது. (ஒ)




# மகன்கள் கண்பார்வை பெற உயிர்த்தியாகம் செய்த தாய்

இரு மகன்களுக்குப் பார்வை தருவதற்காக உயிரைத் தியாகம் செய்த பெண்ணின் கனவை நனவாக்க மருத்துவர்கள் தீவிரமாக முயற்சிசெய்து வருகின்றனர்.

தமிழகத்தின் சென்னை கொடுங்கையூர் தென்றல் நகரில் வசித்து வருபவர் சங்கர். கட்டடத் தொழிலாளி. இவரது மனைவி தமிழ்ச்செல்வி (வயது-37) இவருக்கு குமரன் (வயது 17), மோகனகுமார் (வயது 15) என்ற இரு மகன்கள் உள்ளனர். இருவருக்கும் பிறவியிலிருந்தே பார்வை தெரியாது.

இதனால், மிகவும் வேதனையுற்ற தமிழ்செல்வி, மகன்களுக்குப் பார்வை தருவதற்காக தனது கண்களைத் தானம் செய்தபின் சமீபத்தில் தற்கொலை செய்துகொண்டார்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள சங்கர நேத்ராலயாவில் தமிழ்ச்செல்வி கண்தானம் செய்திருந்தார்.

அவரது மறைவு குறித்து தகவல் கிடைத்ததும் ஸ்டான்லி அரசினர் மருத்துவமனைக்குச் சென்று தமிழ்ச்செல்வியின் விழிவெண்படலத்தை மருத்துவர்கள் எடுத்துப் பாதுகாத்து வருகின்றனர். அவற்றைத் தீவிரமாக ஆய்வுசெய்ததில் யாருக்கும் பயன்படுத்த இயலாத நிலைமை உள்ளதாக அவர்கள் கூறினர்.

எனினும், அவரது இரு மகன்களுக்கும் நவீன அறுவைச் சிகிச்சை செய்து, பார்வை பெறும் விதத்தில் மாற்றுக் கண் பொருத்தவும் டாக்டர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக ஏற்கெனவே அவ்விரு இளைஞர்களின் கண்களை டாக்டர்கள் பரிசோதனை செய்துள்ளனர்.

கண்கள் தானம் பெற்றபின் இவ்விருவருக்கும் விரைவில் பொருத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ)

# கண்ணீர் அஞ்சலி



## செல்லத்துரை யோகேஸ்வரநாதன்

**செயலாளர் (பதில்) வலி. கிழக்கு**
**தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-41811)
(21-14-45-24)

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,**
**நீர்வேலி.**

# மரண அறிவித்தல்



## சின்னப்பு துரைசிங்கம்

குருசு மதவடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னப்பு துரைசிங்கம் 21.03.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அன்னம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் மகாலிங்கம் ஆகியோரின் சகோதரனும் செல்லமணியின் கணவரும் பகவத்சிங், கங்காதேவி, ஜமுனாதேவி, ரூபசிங்கம், ரமணிதேவி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2005) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்திற்காக காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

*குருசுமதவடி,*
*ஆனைக்கோட்டை.*
(43496) (32-14-45-24)

# கடலலையில் சங்கமமான எம் உறவுகளின் 90 ஆவது நினைவுநாள்

சுவாமியின் படைப்பு



**ஜீவநாதன் ஞானேஸ்வரி**
21 - 02 - 1962
(ஆங்கில ஆசிரியை. கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)



**ஜீவநாதன் நிரோஜன்**
10 - 10 - 1988
(யாழ்பரியோவான் கல்லூரி மாணவன் A/L -2007)

சுவாமியின் படைப்பு



**கந்தையா ஆசைப்பிள்ளை**
31 - 10 - 1924
(C-9 மிராஜ் வீடமைப்புத் திட்டம், சொய்சாபுர, மொறட்டுவ)



**அருள்நேசன் மஞ்சுளா**
11 - 02 - 1965
(C-9 மிராஜ் வீடமைப்புத் திட்டம், சொய்சாபுர, மொறட்டுவ)

சுனாமியின் பறிப்பு 26.12.2004,

"சுனாமிப் பேரலை ஓய்ந்துவிட்டது - எம்
கண்ணீர் அலையோ இன்னும் ஓயவில்லை"
உங்கள் ஆத்மசாந்திக்காகத் தினமும்
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (25.03.2005) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**க.ஆ.ஜீவநாதன்**
**இல.10, வைரவர் கோயில் வீதி,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

**- குடும்பத்தினர்.**
(43491)(50-11-15)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

தென்மராட்சி,மார்ச்25

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே இன்று நடைபெறவிருந்த மெய்வன்மை இறுதிப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறுமென்று வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (202-117)

## நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். பிரதேச செயலகப் பகிரங்கச் சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## திருவாசக முற்றோதல்

அரியாலை,மார்ச்25

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி இடம்பெறும்.

அத்துடன், விசேட பூசை வழிபாடுகள் எனபனவும் நடைபெறும். (17)

## நாதோபாஸன ஆராதனை

யாழ்ப்பாணம்,மார்ச்25

இணுவையூர் அமரர் மா.த.ந.வீரமணி ஐயரின் பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மகா வித்துவானுடைய இணுவில் இல்லத்தில் நடைபெறும்.

மூத்த பத்திரிகையாளர் லயன் செல்லப்பா நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான சிவாச்சார்யார் கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்த சிவாச்சார்யார் ஆசியுரை வழங்குவர்.

நிகழ்வில் வேல்விழி சுப்பிரமணியத்தின் பாட்டு இடம்பெறும். பக்கவாத்தியங்களாக வயலின் உ.இராதாகிருஷ்ணன், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், முகர்சிங் - கே.நந்தகுமார் வாசிப்பர். (202)

## தீவகநலன் காப்பகத்தின் பொதுக் கூட்டம்

தீவக மக்கள் நலன் காப்பகத்தின் பொதுக்கூட்டம் நேற்று பெருங்குளம் மகாமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபற்றது.

வேலணைப் பிரதேசப் பொறுப்பாளர் இயாழ் நம்பி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப. கனகலிங்கம், தேசிய எழுச்சிப் பேரவையின் தீவக இணைப்பாளர் சி.ஜெயா, தீவக அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி அ.தங்கராணி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தீவகக கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த இசைச்செல்வன் ஏற்றினார்.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. புதிய தலைவராக த.தனேந்திரன் தெரிவுசெய்யப்பட்டார். (எ-202)

## தையல் இயந்திரங்கள் வழங்க ஏற்பாடு

வலிமேற்கு,மார்ச்25

வலிமேற்கு பிரதேசத்தில் போரினால் கணவனை இழந்த பதினொரு விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் அதற்குரிய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ மோகன்றாஸ் எடுத்துள்ளார்.

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கே இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-175)

## இளங்கலைஞர் மன்றம் மாதாந்த கலை நிகழ்ச்சி

இடம்: மன்றக் கலாமண்டபம்
நாள்: நாளை (26.03.2005) சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி

தலைவர்: **மஹாராணி க.சோமசேகரம்** அவர்கள்
பிரதம விருந்தினர்: **திரு.அந்தனி செல்வராஜ்**
(President C.E.O., Lincare Ltd., கனடா)
சிறப்புவிருந்தினர்: **திரு.அருணகிரி ஸ்ரீசெல்வம்**
(பொறுப்பதிகாரி, பொலீஸ் நிலையம், கோப்பாய்)
இசைக்கச்சேரி:
இன்னிசை வேந்தர் **பொன்.சுந்தரலிங்கம்**

சிறந்த பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.
பொன்னாலை சந்திர பரத கலாலயம் வழங்கும்
நாட்டியாஞ்சலியும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்

*சட்டநாதர் வீதி, நல்லூர்.* **- மன்றத்தினர்.**
(சி-41815) (42-14-45-24)


## 23.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200171900 இலிருந்து
200190959 வரை

சீட்டிழுப்பு இல. 1592

03 10 25 41 சுப்பர் எண் 07

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.29,04,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 29,04,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 509 | 1,000/- | 5,09,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,644 | 500/- | 8,22,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,779 | 40/- | 9,91,160/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 23,391 | 20/- | 4,67,820/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,52,511 | 10/- | 35,25,110/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.89,65,090/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 38,46,050/-

- தொடர் இல. 300163387 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 26 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும், வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

200189225-6-50
200180983-5-41
200186023-4-36
200179798-0-77
200173510-7-76

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# 90 ஆம் நாள் நினைவில்...



இதமான கனவுகளோடு
08 - 01 - 1980

சுமையான நினைவுகளோடு
26 - 12 - 2004

## செல்வி தனுஷியா கொன்சன்ரைன்

(தேசிய கல்வியியல் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியை)

*தொன்னூறு நாள்கள் நீ இல்லா. நிமிடங்கள்*
*தொன்னூறு ஆண்டாய் இதயத்தில் கனக்குதம்மா!*
*தொன்னூறு நாளென்ன தொன்னூறு ஆண்டுகள்*
*போனாலும் போகாது உன் நினைவு*
*துள்ளித் திரிந்து துயர்துடைத்தாய் - உன்*
*துள்ளல் நடையை இனியெங்கே காண்போம்?*
*கண்களால் கதைசொல்லிக் கவர்ந்திழுத்திடுவாய் - உன்*
*காந்தக் கண்கள் இன்றெங்கே?*
*சாறிகட்டி நீ சவாரி செய்கையில்*
*சலிப்பதில்லை உன் வருகை*
*சின்னக்கா எப்போ வருவா என்று*
*சிறுசுகள் கேட்க*
*நாளைக்கு வருவா என்று சொல்லி*
*நாம் கிடந்து தவிக்கின்றோம்*
*எங்கம்மா சென்றாய் நீ மீண்டும்*
*எம்முடன் வாழ எப்போ வருவாய்?*

நிரந்தர முகவரி:
**மாமுனை, செம்பியன்பற்று**
தற்காலிக முகவரி:
**அரசடி லேன், பருத்தித்துறை.**

மீளாத்துயரில்:
**குடும்பத்தினர்.**
(43497)(21-14-45-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் தொண்டாற்றும் திருமகனும் எமது ஆலய தேர்த்திருப்பணியினை ஆரம்பித்து வைத்த பெருமகனுமாகிய

**சிவத்திரு குமாரசாமி ஐயா**

அவர்கள் அகவை அறுபதினைக் கொண்டாடும் இவ்வேளையில் பல்லாண்டு நலமுடன் வாழ முருகப்பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

சாளம்பை முருகமூர்த்தி
ஆலய பரிபாலன சபை
கோட்டைக்காடு, மல்லாகம்.

(43503)(29-16-17)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**செல்லத்துரை யோகேஸ்வரநாதன்**

எமது கணனிப் பயிற்சி நிலையத்தில் கடமையாற்றும் செல்வி யோ. சுமிதா அவர்களின் தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(43505)(29-16-17) PC WORLD

## ஓர் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 20 ~ 04 ~ 1936



உதிர்வு 25 ~ 03 ~ 2004

**அமரர் அரியகுட்டி நடேசு**

ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் மனதில் என்றென்றும்
நிலைத்திருக்கும்.

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி. (43505)(29-16-17)

தங்கள் நினைவுகூரும்:
மனைவி, பிள்ளைகள்.


## பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ்.றோட், இணுவில்

A/L 2006
பொருளியல் அலகுகள்
★ பேரினப் பொருளாதாரம்
★ பகுதி II - பணம், வங்கி, விலைமட்டம்
ஆரம்பம்: 26.03.2005 சனி 4 p.m.
(43509)(29-16-17)

## BARATHY சித்தன்கேணி
A/L 2006,2007
பௌதிகவியல்
திரு.சிவகுமார்
(B.Sc. dip in Ed.)
ஆரம்பம்: 27.03.2005 ஞாயிறு
3.30 p.m. (ப.நே.)
A/L 2006
இணைந்தகணிதம்
அலகு ★ வட்டம்
★ எளிமை இசை இயக்கம் (S.h.m)
புதன், வியாழன் - 4.30
திரு.விஜேந்திரன்
(B.Sc. Dip in Ed.)
(43508)(29-16-17)

## விற்பனையாகின்றது
A/L பொருளியல்
இலங்கையின் பொருளாதாரம்
வினா-விடை விளக்கக் குறிப்புக்கள்
(புதிய பாடத்திட்ட, நடைமுறை விடயங்களுடன்)
R.RAJESWARAN
B.Com.dip in Edu.
(Jaffna Central College)
கிடைக்குமிடங்கள்:-
Poopalasingam Book Depot,
D.M.I Tution Centre,
Srilanka Book Depot.
(43499)(29-16-17)

## திருமணக் கார்
குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: இல.396,
கையிலாயபிள்ளையார் கோயிலடி,
உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0777 283795.
(சி-41680)(29-16-17)

## திருமணக் கார்
குளிரூட்டப்பட்ட கார் திருமணத்
தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777 - 747095
0776 - 258204
(சி-41585)(29-16-17)


# 4 புதிய பிரதித் தலைவர்கள் இ.தொ.காவுக்கு நியமனம்

கொழும்பு,மார்ச்25

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை முற்றுமுழுதாக மறுசீரமைக்கும் திட்டத்தின் முதல் அம்சமாக அதற்கு நான்கு புதிய பிரதித் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாளகளாக சிலாபம் டொல்பின் ஹோட்டலில் நடைபெற்ற இ.தொ.காவை மறுசீரமைப்பதற்கான விசேட மாநாட்டின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியாவிலிருந்து நான்கு பேராசிரியர்களும் கலந்துகொண்டு மறுசீரமைப்பு ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றனர்.

ஒற்றுமையாகவும், குறிக்கோளுடனும் கட்சியை எப்படி கட்டியெழுப்புவது என்பது பற்றியும், எதிர்காலத்தில் அரசியல் பிரச்சினைகளை எதிர்நோக்குவது எவ்வாறு என்பது பற்றியும் இங்கு விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. கட்சி மறுசீரமைப்புத் திட்டத்தின் முதல் அம்சமாக எம்.சச்சிதானந்தன், துரை, மதியுகராஜா, வே.இராதாகிருஷ்ணன், சிவராஜா ஆகியோரை பிரதித் தலைவர்களாக நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கந்தசாமி 24.03.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கம் அமராவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம்மா, இராமநாதர், தங்கம், கைலாயவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சபாநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வட்டு இந்துக் கல்லூரி), மார்க்கண்டேயர் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), கனகலிங்கம், ஜெயலட்சுமி, விசுவநாதர் (பனம் பொருள் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் த்ந்தையும் ச.புஸ்பதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வட்டு மத்திய கல்லூரி), ராஜேஸ்வரி, முத்துமாரி, குணரட்ணம் (ஓய்வுபெற்ற மதிப்பீட்டாளர்), இந்துமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, கரதன், துர்யா, சத்யன், வினோசிறி, காலஞ்சென்ற சுடர்ஒளி, கௌரிசங்கர் மற்றும் சுடர்மதி ரமணன், குமணன் (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), தேவகி, தயாளினி (வெளிவாரி பட்டப்படிப்பு மாணவி), விமலினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் சாரங்கா, சாகித்யன், சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, அராலி பூனாவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (43506)(29-16-17)

### கார்த்திகேசு தனபாலசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர், யா / முத்துத்தம்பி வித்தியாலயம்)

புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தறவளை பசார், டிக்கோயாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தனபாலசிங்கம் அவர்கள் 23.03.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நுவரெலியா முன்னாள் வர்த்தகர் சண்முகம் கார்த்திகேசு பொன்னம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாக இலகுப்பிள்ளை - நீலாம்பாள் அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தனலக்சுமியின் (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சத்தியேந்திரா (மருத்துவபீட மாணவன், யாழ், பல்கலைக்கழகம்) மற்றும் பாலேந்திரா (சுவிஸ்), தனுஜா (டிக்கோயா), தனேந்திரன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜிதா(சுவிஸ்), இரத்தினதீபன் (கொமர்ஷல் வங்கி, நாவலப்பிட்டி), சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகசபை(இளைப்பாறிய அதிபர்), கனகாம்பிகை (பிரான்ஸ்), இந்திராணி (இளைப்பாறிய ஆசிரியை), பேராசிரியர் குகபாலன் (யாழ். பல்கலைக்கழகம்), லோகநாதன் (ஆசிரியர், - ஜேர்மனி), திருநாவுக்கரசு (அதிபர், வெலிஓயா தமிழ் வித்தியாலயம், ஹட்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாதேவி பாலசிங்கம் (ஜேர்மனி), திலகவதி (வட்டக்கச்சி), காலஞ்சென்ற இரத்தினபூபதி சற்குணம் மற்றும் லோகநாதன் (லண்டன்), யோகேஸ்வரி இரங்கநாதன் (வட்டக்கச்சி), யோகலட்சுமி விஸ்வநாதன் (ஆசிரியை, வட்டக்கச்சி) காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் சுலோசனா குணரத்தினம் (ஜேர்மனி), ஜெகநாதன் (லண்டன்), காலஞ்சென்ற கனகசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் அன்னப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) சண்முகநாதன் (இளைப்பாறிய அதிபர் - வட்டக்கொட), கோகிலா (யாழ்ப்பாணம்), காஞ்சனா (ஜேர்மனி), ஜெயலக்சுமி (ஹட்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின், இல 51, தறவளை பசார் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக டிக்கோயா மயானத்திற்கு எதிர்வரும் (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


0512222148

தகவல்:
பேராசிரியர் கா. குகபாலன் (சகோதரர்).

(சி-41818)(29-16-17)

### தானியேல் அல்பேட் தம்பிநாயகம்

நவாலி தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் (வைத்தீஸ்வராக் கல்லூரி) 24.03.2005 அன்று காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற மோசஸ் தானியேல் அடைக்கலம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி ஹெலனா கிருபைமணியின் (ஆசிரியர், நவாலி மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு.திருமதி யேசுசகாயம் ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி தர்மினி (கனடா), நிமால் (பொறியியலாளர், பலாங்கொடை), தயாளன் (R.D.A கிளிநொச்சி), அகிலன் ஆகியோரின் பாமிசகு தந்தையும் றோச் (கனடா), திருமதி நி. தயாளினி (பலாங்கொடை), திருமதி த.லிங்கேஸ்வரி (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிசாந்தி, டேமியன், பிரியந்தினி, லக்ஷியா ஆகியோரின் பேரனும் யேசுதாசன் (பொறியியலாளர்), காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், ஞானப்பிரகாசம், பிரான்சிஸ் சேவியர் மற்றும் திருமதி சின்னத்துரை (ஓய்வுபெற்ற அதிபர், புனிதசாள்ஸ் ம.வி.) திருமதி விக்கிரமசிங்க (தாதி, கண்டி), திருமதி யேசுரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (26.03.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, நவாலி சேமக் காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(43511)(29-16-17) தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கனகராஜா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், காணி அபிவிருத்தித் திணைக்களம்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, பொன்னையா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகராஜா நேற்று (24.03.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.



அன்னார் பரமேஸ்வரியின் (பூமணி) அன்புக் கணவரும் மஞ்சுளா (குஞ்சு), வசந்தி (ஆசிரியை, வ/வவுனியா தமம.வி.), ஆனந்தகுமாரராசா (சுவிஸ்), சண்முகாதேவி, சாந்தினி (சுவிஸ்), மாலினி (வ/சீ.சீ.ரீ.எம். பாடசாலை), முகுந்தன் (சுவிஸ), இராகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினராசா, காந்தராஜா (ரெலிக்கொம், வவுனியா), பரமானந்தம் (இணுவில்), சூரியகலா (சுவிஸ்), பாலகுமார் (சுவிஸ்) தர்மானந்தசிவம் (I.S.A. கல்வித் திணைக்களம், வவுனியா), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, கனகம்மா, பூரணம், சரஸ்வதி, நடராசா (ஜேர்மனி), செல்லம்மா (ஜேர்மனி), ஐயாத்துரை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.நவரத்தினராசா (மருமகன்),
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொன்னையா லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி-41822)(29-16-17)

## மனிதமேம்பாடு குறித்த கலந்துரையாடல

யாழ்ப்பாணம்,மார்ச்25

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சத்திய சாயி மனித மேம்பாடுகளை மாணவர்களுக்கு எடுத்துச் செல்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை இல II மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சத்திய சாயி நிறுவன ஆலோசகர் எஸ்.சிவஞானம், மத்திய இணைப்பாளர் மு.வன்னியசேகரம், புனர்வாழ்வு அமைச்சு ஆலோசகா சு.சிவதாசன், சிலிங்கோ ஸ்தாபன சத்திய சாயி அறக்கட்டளை உபதலைவர், சட்டத்தரணி மாலா சபாரத்தினம், ஓய்வுபெற்ற திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.புகேந்திரன் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

(எ-202)

# மீண்டும் உயரப்போகிறது எரிபொருள்களின் விலை
## பெற்றோல் லீற்றர் 100 ரூபாவாகும்

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற வற்றின் விலைகள் வெகுவிரைவில் அதிகரிக்கப்படக்கூடுமென்று அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து, இலங்கையிலும் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டியதேவை எழுந்துள்ளதாக மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் அமைச்சு பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டிவருமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார். எனவே, நாட்டில் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான அனுமதியை அமைச்சரவையில் தாம் கோரப்போகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள்விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் பெற்றோல் ஒரு லீற்றர் 100 ரூபாவாகலாம் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போது பெற்றோலின் விலை 75 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இதேவேளை, கொத்தணி பஸ் நிறுவனங்களை மாற்றியமைத்து இலங்கைப் போக்குவரத்துச்சபை நிறுவுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி போக்குவரத்துச்சபை அமைக்கப்பட்ட பின்னர் சுயவிருப்பின்பேரில் ஓய்வுபெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைக்குவந்த பின்னர் நாட்டின் போக்குவரத்துச்சேவையை சிறந்த முறையில் மேம்படுத்தமுடியும் என போக்குவரத்து அமைச்சர் பீலிஸ் பெரேரா தெரிவித்தார். (த-க)

### பாதிக்கப்பட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்துக் கொடுக்கவேண்டியது அவசியம்.

எனினும், புதிய வீடுகளை அமைக்க போதிய காணிகள் இல்லை. விலைக்குக் காணிகளைக் கொள்வனவு செய்ய அரசு முனைந்தது. அதற்கு ஒரு சில தனியார்களே முன்வந்தனர். இதுவும் போதாது.

தனியாரிடம் உள்ள மேலதிக காணிகள் எனக் கருதப்படுபவற்றை அரசு சுவீகரித்து, அதில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க எண்ணியுள்ளது.

இதற்காக ஜனாதிபதியின் அனுமதிக்குக் காத்திருக்கிறோம் - எனத் தெரிவித்தார்.

### பொதுக் கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இலங்கை சமாதானச் செயலகப் பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்ணவிடம் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இலங்கை அரசுக்கான புதிய யோசனைத் திட்டத்தைக் கையளித்தார்.

இந்த யோசனைத் திட்டத்தின் புலிகளுக்கான பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் மேற்குலக நாடுகளில் சுற்றுப்பயணம் செய்வதால், அதேதினத்தில் (கடந்த செவ்வாயன்று) சுவிட்ஸர்லாந்தின் பேர்ன் நகரில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் வைத்து புலிகளின் அரசியல் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் உள்ள விடயங்கள் குறித்து இலங்கை திரும்பி வன்னியில் தமது தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்தாலோசனை நடத்தியதன் பின்னரே இவ்விடயம் குறித்துத் தமது முடிவைத் தெரிவிக்க இயலும் எனப் புலிகளின் தரப்பு நோர்வே அனுசரணையாளர்களுக்குக் கோடிகாட்டியிருப்பதாக அறியவருகிறது.

அதனால், விடுதலைப் புலிகளின் அரசியல் குழுப் பிரதிநிதிகள் நாடு திரும்பி, வன்னிக்குச் சென்று, தலைவர் பிரபாவுடன் விரிவான கலந்தாலோசனைகளை முன்னெடுக்கும் வரை இவ்விடயத்தில் முன்னேற்றம் ஏதும் ஏற்படச் சாத்தியம் இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளோடு ஓர் இணக்கத்திற்கு வருவதை ஆளும் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடுமையாக எதிர்ப்பதால், இவ்விடயத்தை முன்நகர்த்த முடியாமல் தவிக்கும் - தடுமாறும் - அரசுத் தரப்பும், அதனால் இணக்க நிலையை ஏற்படுத்தாமல் மேலும் காலத்தை இழுத்தடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், இந்த விடயத்தில் இணக்க நிலை ஏற்பட இப்போதைக்கு வாய்ப்பில்லை என்று கருதப்படுகின்றது.

புலிகள் சமர்ப்பித்த வடக்கு - கிழக்குத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைத் திட்டத்தில் சர்ச்சைக்குரியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் சுட்டிக்காட்டப்பட்ட ஒரு அம்சத்தை ஒத்த ஒரு பிரச்சினையே இப்போது பொதுக்கட்டமைப்பிலும் இணக்கம் காணமுடியாத சிக்கலைத் தோற்றுவிப்பதாகக் கூறப்படுகின்றது. (த-க)

UNIT
P4 Computer sets
@ Colombo price
PIII Compaq Computers
@ offered price
All Computer spares
@ Colombo based price
தறைக்கப்பட்ட விலைகள் stock உள்ளவரை மட்டுமே
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

### வெலிகந்தப் பிரிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்ட தினத்திலேயே இவருக்கு பிரிகேடியர் தரத்திலிருந்து மேஜர் ஜெனரல் பதவி உயர்வு கிட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

கருணா விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறைத் தளபதியாக இருந்த காலத்திலேயே இவருக்கும் கருணாவுக்கும் நெருங்கிய நல்லுறவும் தொடர்பும் இருந்ததாக சில வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்கில் தம்மைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு சதித்திட்டம் தீட்டி முயற்சித்து வருவதாக இவர் சிங்கள ஊடகங்களுக்கு அண்மையில் பேட்டியளித்தர். அதன்மூலம் சிங்களவர் மத்தியில் தம்மை ஒரு 'ஹீரோ' ஆக இவர் அடையாளப்படுத்த முயன்றார் எனப் பாதுகாப்பு வட்டாரங்களில் குறைகூறப்படுகின்றது.

கிழக்கில் அண்மைக்காலத்தில் புலிகள் - அரசுப் படைகள் உறவு சீர்கெட்டிருக்கும் பின்னணியில் அதைச் சீர்செய்யும் நடவடிக்கையாக இவரை அங்கிருந்து இடம்மாற்றுவது குறித்து இராணுவ உயர்பீடங்கள் தீவிரமாகச் சிந்தித்து வருகின்றன என்த் தெரிகின்றது.

இவரை அங்கிருந்து கொழும்புக்கு அழைத்துக்கொண்டு அவரது இடத்துக்கு 23ஆவது டிவிஷனின் பொதுக் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் சனத் கருணாரத்னவை நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேஜர் ஜெனரல் தர பதவி உயர்வை எதிர்பார்த்திருக்கும் சனத் கருணாரத்ன இப்போது இலங்கை அரசின் சமாதானச் செயலகத்துடன் இணைக்கப்பட்டு அதில் பணியாற்றி வருகின்றார்.

பதவி உயர்வுடன் அங்கிருந்து 23ஆவது டிவிஷனின் தளபதியாக அவர் இடமாற்றப்படலாம் எனத் தெரிகின்றது.

1992ஆம் ஆண்டு ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளான போதும், வெற்றிலைக்கேணி கடற்கரையோரம் இலங்கை இராணுவத்தின் மீட்புப் படையணி வந்து தரையிறங்கி, ஆனையிறவு வரை முன்னேறி அதைக் காப்பாற்றும் வரை ஒருசில நூறு இராணுவத்தினருடன் அந்த முகாமைப் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிடாமல் தக்கவைத்திருந்த முகாம் தளபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் திருகோணமலையிலும், பருத்தித்துறையிலும் இருந்த பிரிகேட்டுக்களின் தளபதியாகப் பணியாற்றிய அவர், சிறிது காலம் யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த 51ஆவது டிவிஷன் படையணியின் தளபதியாகவும், சிலவருடங்கள் இராணுவப் பேச்சாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

பிரிகேடியர் சனத் கருணாரத்ன இலங்கை அரசின் சமாதானச் செயலகத்தில் தற்போது பணியாற்றி வருகிறார். இக்காலப்பகுதியில் அமைதி முயற்சிகள் தொடர்பாக புலிகளின் சமாதானச் செயலகத்துடன் தொடர்ந்து விடயப் பரிமாற்றங்களில் ஈடுபட்டதன் மூலம் புலிகளோடு தனிப்பட்ட நல்லுறவைப் பேணி வருபவர் இவர் எனக் கருதப்படுகின்றது.

இத்தகைய ஒருவரை சர்ச்சைக்குரிய கிழக்குப் பகுதிக்கு அனுப்புவதன் மூலம் அங்கு நிலைமை மோசமடையாமல் பார்க்கலாம் என அரச உயர்வட்டாரங்கள் கருதுவதாகக் கூறப்படுகின்றது. (த-க)

எல்லைப்படை மாவீரர் நினைவுக்கிண்ணம்

# சென்மேரிஸ், சிவானந்தா அணிகள் நேற்றைய ஆட்டங்களில் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் சென்.மேரிஸ் வி.கழகமும் சிவானந்தா வி.கழகம் வெற்றிபெற்றுள்ளன.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த குறுஞ்சிக் குமரன் வி.கழகத்திற்கும் யாழ். லீக்கைச் சேர்ந்த சென்.மேரிஸ் வி.கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் முடிவடையும்போது இரு அணிகளுமே தலா இரண்டு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தன. சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் சிவானந்தா விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல்கணக்கில் கண்ணகி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. (கு-86)

### சிப்பாய்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பாதுகாப்பு அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே, துப்பாக்கிச் சமரொன்றில் சிக்கி இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இன்னுமொரு இராணுவச் சிப்பாய் பாழடைந்த கட்டடமொன்று திடீரெனச் சரிந்து வீழ்ந்தபோது அதில் சிக்கி உயிரிழந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (கு)

### புளியங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஸ்குமார் (வயது-48), சோமசுந்தரம் (வயது-55), சுதா (வயது-24), சுப்பிரமணியம் (வயது-51), ஸ்டல்லா (வயது-26), பி. கே.தனுசன் (வயது-12), உதயகுமார் (வயது-35), பரணிதரன் (வயது-13), குமரையா (வயது-73), புஸ்பலீலாமணி (வயது-13), சறோஜா (வயது -25), சித்திரா ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் இந்தச் சம்பவம் குறித்துத் தமிழீழ காவல்த்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-12-164)

### டைனமைட் வெடிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணாவிரதம் இருக்கும் பிக்குவின் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாததற்குக் கண்டனம் தெரிவித்தும் மேற்படி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

சிங்கள சமூகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் நேற்றுக்காலை மணிக்கூண்டுக் கோபுரத்தடியில் கூடினர். ஹற்றன் நஷனல் வங்கிப் பகுதியிலும் சந்தைப் பகுதியிலும் பொதுமக்கள் நடமாட்டத்தை அவர்கள் தடுத்தனர். தமது சொல்லை மீறி வந்தால் தாக்குதல் நடத்துவோம் என அச்சுறுத்தினர்.

பெண்கள் சிலர் வீதியின் குறுக்கே அமர்ந்திருந்து மறியலிலும் ஈடுபட்டனர். உடைந்த படகுகளின் பாகங்களை வீதியின் குறுக்கே போட்டு மறியலை ஏற்படுத்தச் சிலர் முயன்றனர். பொலீஸார் அவர்களை அங்கிருந்து விரட்டியதுடன், வீதித்தடைகளையும் அகற்றினர்.

இதனால், சிங்கள இளைஞர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. முறுகல் நிலை தோன்றியது. எனினும், அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

காலைவேளை வாகனப்போக்குவரத்து இடம்பெற்றது. மதியம் அது சற்றுக் குறைவாகக் காணப்பட்டது. பிரதான வீதி, மத்திய வீதி கடைகள் யாவும் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது. பொதுச்சந்தையும், ஏகாம்பரம் வீதியிலுள்ள கடைகளும் மட்டுமே மூடப்பட்டிருந்தன.

பொது வைத்தியசாலை, அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் அதிகமானவை திறக்கப்பட்டு, நாளாந்தக் கருமங்கள் இடம்பெற்றன. தமிழ், சிங்களப் பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. சிங்கள இனத்தவர்களின் ஒரு பகுதியினரும் இந்தக் கடையடைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, காலை 8.45 மணியளவில் திருமலை பஸ் நிலையத்தில் டைனமற் குண்டொன்று வெடித்தது. இதனால், பஸ் நிலையக் கூரை சற்று உடைந்து காணப்படுகின்றது. அப்பகுதியில் நின்றோர் சிதறியோடினர். பஸ் நிலையத்தைச் சுற்றிப் பொலீஸ் காவல் போடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அங்கு குண்டு கொண்டுசெல்லப்பட்டது எங்ஙனம் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நேற்றைய ஹர்த்தாலையொட்டிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலீஸாரும், இராணுவத்தினரும் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். (த-க-12)

### 4 வீத வட்டியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் வெளிவரும்.

அரச ஊழியர்கள் அனைவருக்கும் இக்கடன் வழங்கப்படும். இதில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் அரச ஊழியர்களாயின் இருவரும் கடன்பெற்றுக் கொள்ளமுடியும்.

ஊழியரின் பதவிநிலையைப் பொறுத்து ஐந்து மாத சம்பளத்தை அல்லது பத்து லட்சம் ரூபாவை அரசு கடனாக வழங்கும் திரும்பிக் கட்ட - அடைக்க - வேண்டிய காலம் ஊழியரின் சேவைக்காலத்தைக் கருத்திற்கொண்டு வேறுபடலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### தனியார் மினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இதுவரை காலமும் யாழ். பஸ்நிலையச் சூழலில் தனியார் மினிபஸ்கள் நிறுத்தப்பட்டு வந்தன. இதனால், அங்கு பெரும் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தன. இதனையடுத்து, யாழ். மாநகரசபை தனியார் மினிபஸ் தரிப்பிடம் ஒன்றை நிரந்தரமாக நிறுவமுடிவுசெய்தது.

இதற்கமைய முற்றவெளிமேற்குக் கரைப் பிரதேசத்தில் தனியார் மினிபஸ் தரிப்பிடம் தற்போது நிறுவப்பட்டுள்ளது. அடுத்தமாதம் தொடக்கம் தனியார் மினிபஸ் தரிப்பிடம் அங்கு இயங்கத் தொடங்கும்.

பிரயாணிகளை ஏற்றுதல், இறக்குதல் ஆகிய பணிகள் அப்பகுதியிலேயே நடைபெறும்.

இதேவேளை, கொழும்புக்கான தனியார் பஸ்களும் அப்பகுதியிலிருந்தே சேவையில் ஈடுபடும். பயணிகள் நலன்கருதி முற்றவெளிப் பகுதியில் சுமார் 45 கடைகளும் அமைக்கப்படவுள்ளன - என்று ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-7)

### சத்திரசிகிச்சை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார்.

வைத்திய நிபுணர் குணானந்தத்தை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிரந்தரப் பதவி ஒன்றுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நியமனத்துக்கு முறைப்படி விண்ணப்பம் கோரி அலுவலக நடைமுறைப்படி நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதாக மானிய ஆணைக்குழுவின் தலைவர், மருத்துவ மாணவர் ஒன்றியத் தலைவரிடம் தெரிவித்தார் என்று அறியவந்தது.

மானிய ஆணைக்குழுவின் தலைவரின் இந்த நிலைப்பாடு மற்றும் உறுதிமொழி மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களுக்கு ஓரளவு திருப்தியளித்திருப்பதாகவும் -

அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்பதற்காக யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்த மருத்துவ மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தயாராகி வருவதாகவும் -

தகவல் தெரிவிக்கப்பட்டது.

இது விடயத்தில் இணக்கமான நிலை ஒன்றுஏற்பட்டால், பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ-3)

பொருளியற் கல்லூரி
புவியியல்
A/L 2006
வரைபடங்கள்
ஆரம்பம்:
26.03.2005 சனி
யாழ். -9 மணி
இணுவில் - 11 மணி
P.S. குமரன்
B.A. (Hons)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.